# வாலிபர் உலகம்

JESUS REDEEMS MINISTRIES

மலர்: 12 | இதழ்: 7 | செப்டம்பர் 2021 | ஆண்டு சந்தா ₹ 100/-




# யெகோவா ஹெமெத்

கணித மேதை மட்டுமல்லாமல், கர்த்தரை தேடும்
அனைவருக்கும் தன்னை வெளிப்படுத்துபவரே நம் **மெய்தேவன்**

வாலிபர் உலகம்


08 உண்மை... உயர்வு...

15 சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன்...

20 வெற்றிப்படிகள்

24 ஜெபக்கையேடு


Index

**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?**

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!**

Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" **என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.**

## சந்தா விவரம்

**ஆண்டுக்கு ₹100/-**

**3 ஆண்டுக்கு ₹200/-**

**ஆயுள் சந்தா ₹1,000/-**

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in


JESUS REDEEMS MINISTRIES


**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

தலையங்கம்

# மெய் தேவன்!



**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

தன்னுடைய வாழ்க்கையில் குறிக்கோள் இல்லாமல் வாழ்ந்த ஒரு வாலிபன் காலப்போக்கில் தவறான நண்பர்கள், தவறான பழக்கம் அவனை ஒரு சமூக விரோதியாய் மாற்றிவிட்டது. எனவே அவன் ஒரு கொள்ளைக்காரனாய் மாறினான். இரவில் தனியாக வரும் நபர்களை கொள்ளையடித்து பிழைப்பு நடத்தும் ஒரு மனிதனாய் மாறினான். இப்படியேக் காலங்கள் ஓட, மூர்க்கமும், பாவமும் நிறைந்த மனிதனாய் மாறினான். எத்தனையோ நபர்களை காயப்படுத்தி, கொள்ளையடித்து வாழ்ந்து வந்தான். ஒருமுறை தனியாக வந்த பெண்ணிடம் உள்ள நகையைப் பறித்து, அவளுடைய வாழ்க்கையை கெடுக்கும் நோக்கத்தோடு அவளை நெருங்கினான். அப்பொழுது அந்த பெண் அவனைப் பார்த்து, நான் இயேசுவின் பிள்ளை உன்னால் என்னைத் தொட முடியாது என்று சொன்னாள். உடனே அவன் அவளைப் பார்த்து, நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை, மது அருந்திவிட்டு உன்னைப் பார்த்துக் கொள்கிறேன், என்று சொல்லிவிட்டு அந்தப் பெண்ணை ஒரு பாழடைந்த அறைக்குள் அடைத்துவிட்டுச் சென்றான்.



சில மணி நேரம் கழித்து, ஒரு தவறான எண்ணத் தோடு அந்த அறையின் கதவை அவன் திறந்தபோது, அந்த பெண் முழங்காலில் ஜெபித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து அவன் அதிர்ந்து போனான். அவளைச் சுற்றிலும் ஒரு நெருப்பு வளையம் எரிந்துக் கொண்டிருந்தது. அவனுடைய கண்களால் அதை நம்பமுடிய வில்லை. அவனுடைய போதை தெளிந்தவனாய் வியந்து நின்றான். அவனால் அந்த அக்கினி வளையத்தைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. அந்தப் பெண் ஜெபத்தை முடிக்கும்போது அந்தக் கொள்ளைக்காரன் அவளைப் பார்த்து, நீ யார்? நீ என்ன செய்து கொண்டிருந்தாய்? என்று கேட்டான். அதற்கு அந்தப் பெண் நான் இயேசப்பாவிடம் ஜெபித்துக் கொண்டிருந்தேன் என்று சொன்னாள். அப்பொழுது அந்தக் கொள்ளைக்காரன், உன்னுடைய கடவுள் உண்மையான கடவுள், அவர் உன்னைக் காப்பாற்றினார், உன்னுடைய தேவனே மெய்யான தேவன் என்று கொள்ளைக்காரன் சாட்சி கொடுத்தான். பின்னர் அவனும் மனம்மாறி ஒரு புது மனிதனாய் சமுதாயத்தில் வலம் வர ஆரம்பித்தான்.

வாலிபனே! நீ ஆராதிக்கும் தேவன் யெகோவா ஹமெத் (மெய்யான தேவன்). *கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா; அவருடைய கோபத்தினால் பூமி அதிரும்; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள்* (எரேமியா 10:10). அவரைப்போல ஒரு தேவன் இல்லை. அவர் இன்றைக்கும் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து கொண்டுதான் இருக்கிறார். ஆபத்திலிருந்து மட்டும் காக்கும் தேவன் அல்ல, கொடூர நெஞ்சம் கொண்ட கொள்ளைக்காரனும், மனம்மாறி, நேர்மையான வழியில் வழி நடத்தும் வல்லமையுள்ள தேவன். அவர் உன்னோடு இருக்கும்போது, நீ எதற்கும் கலங்க வேண்டாம். அவரின் அன்பை அறியாத ஜனங்களுக்கு அவரை அறிவிப்பதே உன்னுடைய பொறுப்பு.

அவரை உனக்குள், **மறைத்து வைக்காதே!**
**ஒளித்து வைக்காதே!**
**வெளிப்படையாய் அவர் அன்பை**
**அனைவருக்கும் அறிவிக்க ஆசைப்படு!**
**அவரே உன் வழியை வாய்க்கப்பண்ணுவார்!** ●

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# Bullet ரோஹித்




கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டாலும், தனது இளம் வாலிப வயது வரைக்கும் கடவுள் நம்பிக்கை இல்லாமல், ஒரு நிமிடம் கூட ஜெபிக்காமல், **Online Game**க்கு அடிமைப்பட்டிருந்த சகோதரர் இன்றைக்கு மணிக்கணக்காக ஜெபிக்கும் வாலிபராக தேவன் எப்படி மாற்றினார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோமா?

## உங்களுடைய சிறுபிராயம் மற்றும் குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?

என்னுடைய பெயர் **P. Nikin Rohith.** நான் சேலம் மாவட்டத்தில், ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். ஆனால் இயேசுவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமே இல்லை. என் தாய், தந்தை கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்கள். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். சிறுவயதில் இருந்தே ஜெபிப்பதோ, வேதம் வாசிப்பதோ, ஆலயத்திற்கு செல்லும் பழக்கமோ இல்லை. வருடம் ஒருமுறை கிறிஸ்துமஸ், புத்தாண்டுக்கு மட்டும் புத்தாடையை காண்பிப் பதற்காகவே ஆலயத்திற்குப் போவேன்.


சகோதரர் தன் குடும்பத்துடன்

## பள்ளி படிப்பு பற்றி சொல்லுங்களேன்?

நான் சேலத்தில் Holy Cross பள்ளியில் படித்தேன். சிறுவயதில் இருந்தே பெற்றோருக்கு கீழ்ப்படியமாட் டேன். தங்கையிடம் அன்பாக இருக்கமாட்டேன். பல நேரங்களில் குடும்பத்தாருடன் சண்டை தான் போடுவேன். சிறுவயதில் இருந்தே கடவுள் நம்பிக்கை இல்லாததால் பள்ளியில் நடத்தும் **Catechism class**-ல் கலந்து கொள்ளமாட்டேன். டி.வி.யில் **Cricket match** தான் எப்போதும் பார்ப்பேன். எனவே கிரிக்கெட் மேல் அதிகமான ஆர்வம் வந்தது. பிறகு நண்பர்களுடன் சேர்ந்து கிரிக்கெட் தான் விளையாடிக் கொண்டிருப்பேன். நாளடைவில் கிரிக்கெட் விளையாடுவதற்காகவே பள்ளிக்குப் போவேன். இதைக் கவனித்த பெற்றோர், நான் நன்றாக படித்து நல்ல மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று டியூசன் சேர்த்துவிட்டார்கள். ஆனால் நான் டியூசனுக்கு ஒழுங்காக போகமாட்டேன். டியூசனுக்கு போகிறமாதிரி

வீட்டிலிருந்து கிளம்புவேன், ஆனால் ஊர் சுற்றவோ, கிரிக்கெட் விளையாடவோ போய் விடுவேன். இதைக் கேள்விப்பட்ட பெற்றோர் என்னை +2வில் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டார்கள். ஹாஸ்டலில் சேர்ந்த 7ம் நாள் வீட்டிற்கு வந்துவிட்டேன். இப்படித்தான் என்னுடைய பள்ளி வாழ்க்கை இருந்தது.

### சரி... பள்ளி வாழ்க்கைதான் அப்படி முடிந்தது, உங்களது கல்லூரி வாழ்க்கையைப் பற்றி சொல்லுங்களேன்?

எனக்கு சிறுவயதில் இருந்தே பைக், கார் மீது மிகவும் ஆர்வம் உள்ளதால் என் தந்தை என்னை கோயம்புத்தூரிலுள்ள தனியார் கல்லூரியில் Mechanical Engineering சேர்த்து விட்டார். பிறகு அம்மா, அப்பாவுக்கு கோவையில் வேலை கிடைத்ததால் குடும்பமாக அங்கு சென்று விட்டோம். நான் கல்லூரியில் சேர்ந்த பிறகு அதிக நண்பர்கள் கிடைத்தார்கள். எப்பொழுதும் நான் நண்பர்களுடன்


சகோதரர் தன் நண்பர்களுடன்

தான் இருப்பேன். என் நண்பர்கள் எல்லாரும் நல்ல பைக் வைத்திருந்தார்கள். ஆனால் என்னிடம் பைக் இல்லாததால் பெற்றோரிடம் அடம்பிடித்து Bullet Bike வாங்கினேன். ஒவ்வொரு வார இறுதியில் என்னுடைய வண்டியை எடுத்துக் கொண்டு நண்பர்களுடன் எங்கேயாவது சென்று விடுவேன்.

ஒரு மாதத்தில் 1000 கிலோமீட்டர் Complete பண்ண வேண்டும் என்பதே என்னுடைய targetஆக இருந்தது. அதற்காக எங்கு வேண்டுமானாலும் செல்லுவேன். சில நேரங்களில் trip போகிற தற்கு காசு இருக்காது. எனவே பெற்றோரிடம் சண்டை போட்டு காசு வாங்கி சென்று விடுவேன். என் தாய், தந்தை சபைக் காரியங்களில் ஆர்வமாக ஈடுபடுவதால், போதகர்கள் வீட்டிற்கு வருவார்கள். அவர்கள் வருகிறார்கள் என்று தெரிந்தாலே எங்கேயாவது போய்விடுவேன். குடும்ப ஜெபத்தில் கலந்து கொள்ளமாட்டேன். கல்லூரி நான்காவது வருடம் Project-ல் "MINI BIKE" ஒன்றை நானும் என் நண்பர்களுமாக இணைந்து செய்தோம். அதனால் வீட்டிற்கு போகவே விருப்பம் இருக்காது. ஏற்கெனவே வீட்டிற்கு செல்லமாட்டேன். இதில் Project என்று சொல்லி வீட்டிற்கே செல்வது இல்லை. இதனால் என் பெற்றோர்கள் மிகவும் வருந்துவார்கள்.

### சரி Project முடிந்ததா? அல்லது லாக்டவுன் நாட்களிலும் அதைத் தொடர்ந்து செய்தீர்களா?

இல்லை... லாக்டவுண் நாட்களில் நண்பர்கள்கூட வெளியில் போக முடியாத சூழ்நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் என்னுடைய நண்பரிடம் கேம் ஏதாவது இருந்தால் அனுப்ப சொன்னேன். அவன் Football game ஒன்றை அனுப்பினான்.

> **ஒரு மாதத்தில் 1000 கிலோமீட்டர் Complete பண்ண வேண்டும் என்பதே என்னுடைய targetஆக இருந்தது.**

அதை விளையாடத் தொடங்கினேன். நாளடைவில் அதற்கு அடிமையாகி விட்டேன். இரவில் ஆரம்பித்து அதிகாலை 4 மணி வரைக்கும் விளையாடுவேன். ஏற்கெனவே வீட்டிற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லாமல் இருப்பேன். விளையாட்டிற்கு அடிமையான பிறகு சுத்தமாக எல்லோரிடமும் பேசுவதையே நிறுத்தி தனிமையாகவே இருக்க விரும்பினேன். கேம் விளையாடுவதால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். நான் கேம் விளையாட வேண்டாம் என்று நினைத்தாலும் என்னால் விளையாடாமல் இருக்க முடியாது. கேமில் இருந்து மெசேஜ் வந்தவுடனே கேம் விளையாட போய்விடுவேன். இதனால் சரியாக சாப்பிடாமல்,





இரவு நேரங்களில் கேம் விளையாடும் போது

தூங்காமல் இரவும் பகலும் கேம் விளையாடிக் கொண்டே இருப்பேன். பெற்றோர்கள் எதையாவது பேசினால் கோபம் வரும், சண்டை போடுவேன். இந்த கேம் விளையாடியதால் மிகவும் கஷ்டப்பட்டேன்.

### கேமிற்கு அடிமையான நீங்கள் எப்படி இயேசுவைத் தேடினீர்கள்?

என் உறவினர் சகோதரி எப்போதும் Walk with Jesus பார்க்க சொல்வார்கள். எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லாததால் பார்க்க விருப்பம் இல்லாததால் பார்க்க மாட்டேன். தினமும் சொல்கிறார்களே என்று ஒருநாள் அப்படி அந்த வீடியோவில் என்னதான் சொல்கிறார்கள் என்று பார்த்தேன். சமாதானம் இல்லாமல் இருந்த நாளில் நான் அந்த வீடியோவைப் பார்த்த போது எனக்கே பேசியது போல் இருந்தது. அங்கிள் சொன்ன வசனம் எனக்குள் சமாதானத்தைக் கொடுத்தது. அந்த நாள் முழுவதும் சமாதானமாக இருந்தேன். இது புது அனுபவமாக இருந்தது. இயேசு உண்மையாக உயிரோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது. அதன்பிறகு தினமும் பார்க்க ஆரம்பித்தேன். ஆனால் எனக்கு ஜெபிக்கத் தெரியாததால் ஜெபிக்கமாட்டேன். தொடர்ந்து கேம் விளையாடிக் கொண்டிருந்தேன்.




### சரி... எப்பொழுது முழுவதுமாக அதிலிருந்து வெளியே வந்தீர்கள்?

Walk with Jesus பார்த்த போது சமாதானமாக இருந்ததால் 'ஜெபிக்கலாம் வாங்க' நிகழ்ச்சி பார்த்தாலும் நமக்கு சமாதானம் கிடைக்கும் என்று எண்ணி அதையும் பார்க்க ஆரம்பித்தேன். 'ஜெபிக்கலாம் வாங்க' நிகழ்ச்சியின் போது மட்டும் கேம் விளையாடமாட்டேன். நிகழ்ச்சி 9:30க்கு முடிந்தவுடன் திரும்ப கேம் விளையாட போய்விடுவேன். பெற்றோர்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேன். 'ஜெபிக்கலாம் வாங்க' நிகழ்ச்சியில் அநேக வாலிபர்கள் Candy crush, பப்ஜியிலிருந்து விடுதலை பெற்றார்கள் என்று அங்கிள் சாட்சிகளை வாசிக்கும்போது, நானும் விடுதலை பெற வேண்டும் என்று ஆசையாக இருக்கும். அங்கிள் Football game சொல்லும்போது கேம் Uninstall பண்ணிவிடலாம் என்று நினைப்பேன், ஆனால் என்னால் விளை யாடாமல் இருக்க முடியாது எனவே திரும்ப விளையாட சென்று விடுவேன்.

### சரி... தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந் தீர்கள்...எப்பொழுது இயேசுவை ஏற்றுக் கொண்டீர்கள்?

தொடர்ந்து நான் 'ஜெபிக்கலாம் வாங்க' நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் நான் பார்க்க தவறிவிட்டேன். அந்த இரவு நான் தூங்க செல்லும் முன்பு, அந்த நாளுக்குரிய நிகழ்ச்சி பார்க்க வேண்டும் என்று எனக்குள் ஒரு ஏவுதல் வந்தது. இந்த மாதிரி எனக்கு வந்தது இல்லையே, இது புது அனுபவமாக இருக்கிறது என்று, இரவு 12 மணி அளவில் அந்த நாளுக் குரிய நிகழ்ச்சியைப் பார்க்கத் தொடங்கினேன். அங்கிள் கடைசி 5 நிமிடம் ஜெபிக்க ஆரம்பிக்கும்போது, அந்த கேம்மில் இருந்து "Your Players are waiting, COME AND PLAY", என்ற Notification பார்த்தவுடன் எனக்குள், 'ஜெபத்தைத் தொடரலாமா' அல்லது கேம் விளையாட போகலாமா என்று ஒரு தடுமாற்றம் வந்தது. இப்படி தடுமாற்றம் ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தில் ''உனக்கு அந்த கேம் வேண்டுமா? அல்லது இயேசுவாகிய நான் வேண்டுமா?'' என்று ஒரு சத்தம் தெளிவாக என் காதில் கேட்டது. அப்போது நள்ளிரவு 2 மணி இருக்கும். அந்தச் சத்தம் கேட்டவுடன் நான் பயந்து நடுங்கிப் போனேன். வீட்டில் எல்லாரும் தூங்குகிறார்கள். இயேசு தான் என்னிடம் பேசினார் என்று எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. அந்நேரமே நான் அழுது இயேசுவினிடத்தில் என் பாவங்களை அறிக்கையிட்டு



ஜெபித்தேன். ஜெபித்து முடித்தவுடன் நான் புதிதாக பிறந்தது போல் இருந்தது. என் மனதில் இருந்த தனிமையின் உணர்வு, பாரம் எல்லாம் மறைந்து போனது. பெரிய சமாதானம் எனக்குள் வந்தது.

## சூப்பர், இயேசுவை ஏற்றுக் கொண்டீர்கள்... அதன்பிறகு உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் உண்டானது?

செல்போனில் இருந்த கேம் Uninstall செய்து விட்டேன். அதுவரைக்கும் எனக்கு சொந்தமாக வேதப்புத்தகம் இல்லை. காலை எழும்பினவுடன் சொந்தமாக எனக்கென்று வேதப்புத்தம் வாங்கி படிக்க ஆரம்பித்தேன். இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டேன்.



நானும் என் உறவினர் சகோதரியும் ஜெபிக்க ஆரம்பித்தோம். பிறகு ஆவிக்குரிய நண்பர்கள் கிடைத்தார்கள். முன்பெல்லாம் என் பெற்றோரிடமோ, என் சகோதரியிடமோ பேசமாட்டேன். ஆனால் இப்போது என் குடும்பத்தோடு ஐக்கியமாக இருக்கிறேன். குடும்ப ஜெபத்தில் இணைந்து ஜெபிக் கிறேன். ஒரு நிமிடம் கூட ஜெபிக்க தெரியாத நான் என் ஆவிக்குரிய நண்பர்களுடன் சேர்ந்து 5 மணி நேரம் தேசத்திற்காக ஜெபிக்கிறேன். January 2021 Igniters Camp-ல் கலந்துக் கொண்டேன். அப்போது தேவன் என்னை அபிஷேகித்தார். அந்நிய பாஷையினால் நிரப்பினார். இப்போது தனிமையின் உணர்வு எனக்குள் இல்லை. இயேசு என்னோடு இருக்கிறார் என்ற உணர்வு எனக்குள் எப்போதும் இருக்கிறது. இப்போது தேவைக்காக மட்டுமே பைக் எடுக்கிறேன். என் குண நலன்கள் எல்லாம் தேவன் மாற்றிவிட்டார். கல்லூரி படித்து முடிப்பேனா? என்று சந்தேகத்தில் இருந்த என்னை இப்போது நல்ல மதிபெண் எடுத்து Post Graduate படிக்க கிருபை செய்திருக்கிறார்.



சகோதரரின் ஜெபவேளை

**''கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்'' (பிலி. 1:21)** என்று பவுல் சொல்லியபடி, எனக்காக உயிர்க்கொடுத்த தேவனுக்காக என் உயிரையும்விட ஆயத்தமாக இருக்கிறேன்.

## வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நீங்கள் எப்படிப்பட்ட விடமுடியாத பாவத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் ''இயேசுவே என்னை மன்னியும்'' என்று சொல்லும்போது அவர் உங்களுக்காக சிந்தின இரத்தத்தால் உங்களை கழுவி பாவத்தில் இருந்து மீட்டுக் கொள்வார். **''...இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங் களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்'' (1யோவான் 1:7).** பாவத்தில் இருந்து இலவசமாக விடுதலை கொடுப்பவர் இயேசு மட்டுமே. நீங்கள் இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும்போது, அவர் உங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருப்பார் (தாயாக, தந்தையாக, சகோதரனாக இருப்பார்). எப்படிப்பட்ட போராட்டதையும் கண்டு சோர்ந்து போகாமல், இயேசுவிடம் அறிக்கை செய்யுங்கள், அவர் பார்த்துக் கொள்வார். நீங்கள் இயேசுவைப் பிடித்துக் கொண்டால் உங்களை நிந்திகிறவர்கள் மத்தியில் உங்கள் தலையை நிமிரப் பண்ணுவார்.

**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்கள் கூட இப்படிப்பட்டதான பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறீர்களானால் இயேசுவிடம் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு உங்களை விடுவிக்க ஆயத்தமாக இருக்கிறார். நீங்களும் ஜெபிக்கிறவர்களாக மாற முடியும்! ●**

# உண்மை.... உயர்வு...



உண்மை உயர்வு தரும் என்பது நமது தமிழ்நாட்டின் சிறந்ததொரு முதுமொழியாகும். உயிரே போவதாக இருப்பினும் உண்மையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் நம் முன்னோர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்றோ நாம் சாப்பிடும் உணவு பொருளிலிருந்து உயிர் காக்கும் மருந்து வரை உண்மைத் தன்மையை பார்க்க முடியவில்லை. இன்றைய சமுதாயத்தில் உண்மையான மனிதர்களைப் பார்ப்பதும் அரிதாக உள்ளது. உண்மையுள்ளவன் என்று சொல்லும் போது நம்பிக்கைக்கு பாத்திரவான், நேர்மையுள்ளவன், வாக்குறுதியை நிறைவேற்றுகிறவன், ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளைத் தவறாமல் செய்கிறவன் என்று உண்மையுள்ளவர்களைக் குறித்து சொல்லிக் கொண்டே போகலாம். உங்களை இரட்சித்த தேவன் உண்மையுள்ளவர், ஆனால் நீங்கள் எவ்வளவு உண்மையுள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்றுதான் இந்த மாதத்தில் சற்றே நாம் ஆராய்ந்து பார்க்கப் போகிறோம்.

தற்போதைய தமிழக காவல்துறையில் பணிபுரியும் அல்லது பணிபுரிய விரும்பும் அனைத்து இளைஞர்களுக்கும் முன்மாதிரியாக திகழ்பவர், தமிழ்நாட்டின் 30வது காவல்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. சைலேந்திர பாபு அவர்கள். 1962ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் நாள் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடுத்தர குடும்பத்தில் பிறந்த இவர் குழித்துறை என்னும் பகுதியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை முடித்தார். மதுரை மற்றும் கோவையிலுள்ள தமிழக வேளாண் பல்கலை கழகத்தில் தன்னுடைய இளங்கலை மற்றும் முதுகலை படிப்பை முடித்தார். 1987ஆம் ஆண்டு தன்னுடைய 25வது வயதில் IPS அதிகாரியாக தன்னுடைய காவல்துறைப் பணியைத் தொடங்கினார். தன்னுடைய பணியில் உண்மையாகவும், கடமையை நிறைவேற்றுவதில் நேர்மையாகவும் செயல்படத் துவங்கிய இவர் காவல் துறையில் படிப்படியான பதவி உயர்வுகளைப் பெற்றார். இதுமட்டுமின்றி சிறந்த பணிக்கான முதலமைச்சர் பதக்கம் (2000), நக்சலைட் என்கவுண்டர் மற்றும் யானை தந்தம் வெட்டியவர்களை கைது செய்ததற்காக பிரதமர் பதக்கம் (2001), மேலும் 1997ஆம் ஆண்டு சிவகங்கை ஏரியில் கவிழ்ந்த பேருந்தில் இருந்து 18 நபர்களை உயிருடன் காப்பாற்றியதற்காக ஜனாதிபதி விருது (2005) என்று பல்வேறு விருதுகளைப் பெற்று அநேகருடைய வாழ்க்கைக்கு முன் மாதிரியாக திகழ்கிறார்.



IPS அதிகாரியாக தனது பணியை ஆரம்பித்த இவர் இன்று தமிழ்நாட்டின் முழு காவல் துறைக்கும் பொறுப்பாளராக உயர்த்தப்பட்டுள்ளார். இந்த உயர்வுக்கு மிக முக்கியமான காரணம் அவருடைய உண்மைத் தன்மை. தன்னுடைய பணியில் லஞ்சம் வாங்காமல் நேர்மையாகவும், கண்ணியமாகவும், அசதியில்லாமல் இருந்ததால்தான், இவர் இன்று இந்த அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளார். **“உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்... (நீதி. 28:20)** என்ற வசனத்தின்படி

நாம் நம்முடைய வாழ்க்கையில் உண்மையாக இருக்கும்போது தேவன் நம்மை சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருவேளை நீங்கள் படித்து கொண்டோ அல்லது வேலை செய்து கொண்டோ இருப்பீர்களானால் உங்கள் வேலையில் படிப்பில் அல்லது உங்கள் குடும்பத்திலுள்ள அப்பா, அம்மா மற்றும் ஆசிரியர்களிடத்தில் உங்களது ஆன்லைன் வகுப்பில் உண்மையாக இருக்கிறீர்களா? சற்றே சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் உண்மையாய் இருக்க உங்களை ஒப்புக்கொடுங்கள். **''...உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்'' (நீதி. 2:7).** நான் உண்மையாக இருக்க வேண்டும் என்றுதான் பலமுறை நினைக்கிறேன். ஆனால் என்னைச் சுற்றி இருக்கிற மனிதர்கள் மற்றும் சூழ்நிலையினிமித்தம் என்னால் உண்மையாய் இருக்க முடியவில்லையே என்றுதானே யோசிக்கிறீர்கள்? நோவா நம்மைப் போன்று பாவம் நிறைந்த மனிதர்கள் மத்தியிலும் தங்கள் வழியை தாங்களே அழித்து கொண்டிருக்கும் கொடூரமான ஜனங்கள் மத்தியிலும் வாழ்ந்து வந்தார் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். பாவம் நிறைந்த ஜனங்கள் மத்தியில் தேவன் ஒரு மனிதனைத் தேடினார். நோவா தென்பட்டார் கர்த்தருடைய கண்களில் அவருக்கு கிருபை கிடைத்தது. அதினால், **''...நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந் தான்...'' (ஆதி. 6:9).** நோவாவை உத்தமனாய் மாற்றியது தேவனுடைய கிருபையே. எனவே நீங்கள் அவருடைய கிருபையை சார்ந்து இருக்கும்போது உங்களால் எல்லா சூழ்நிலையிலும் உத்தமமாய் இருக்க முடியும்.





இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து கானானுக்கு நடத்திச் செல்ல தேவன் மோசேயைத் தெரிந்துகொண்டது போல, யூதர்களை பாபிலோனிலிருந்து எருசலேமுக்குள் நடத்திச் செல்ல தேவன் விரும்பிய போது அவருக்கு ஒரு மனிதன் தேவைப்பட்டான். அவர் தானியேலைக் கண்டுப் பிடித்தார். தானியேல் தன்னுடைய இளம் பருவத்திலிருந்தே உண்மையுள்ளவனாய் காணப்பட்டார். அந்நாட்களில் யூத வாலிபர்கள் அநேகர் ராஜாவின் போஜனத்தை (தேவன் விரும்பாத போஜனம்) இராஜாவுக்கு பயந்து புசித்தார்கள். ஆனால் தானியேலும் அவருடைய நண்பர்களும் தேவனுக்கு உண்மையாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்து புசிக்காமல் மறுத்தார்கள். இதனால் தேவன் இவர்களை ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியரிலும் பத்து மடங்கு ஞானவான்களாக மாற்றினார். இதுமட்டுமின்றி தானியேல் தன்னுடைய வாழ்க்கையில் எவ்வளவு கடினமான சூழ்நிலை வந்தாலும் அவருடைய வேலையிலும் தேவனிடத்திலும் உண்மையுள்ளவராய் காணப்பட்டார். தானியேலின் உத்தம இருதயத்தை தேவன் கண்டு அவரை 120 தேசங்களுக்கும், பிரதானிகளின் பிரதானிகளுக்கும் மேலாக ஆண்டவர் அவரை உயர்த்தினார். **''...அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை'' (தானி. 6:4)** என்று தேவன் தானியேலைக் குறித்து சாட்சி சொல்கிறார்.

*எனக்கன்பானவாலிபர்களே, ''நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் (இயேசு) உண்மையுள்ள வராயிருக்கிறார்...'' (2 தீமோ. 2:13). உங்கள் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலையிலும் உங்கள் பேச்சு, நடவடிக்கை எல்லாவற்றிலும் தேவன் தேடக்கூடிய உணர்வுள்ள மனிதனாகவும், உண்மையுள்ள இருதயமுள்ளவனாகவும் இருக்க உங்களை ஒப்புக்கொடுங்கள். ஏனெனில் இன்றைக்கு ஆண்டவர் உண்மையுள்ளவர்களைத் தேடிக் கொண்டு இருக்கிறார். நீங்கள் உங்களை உண்மையாயிருக்க ஒப்புக் கொடுக்கும்போது தானியேலைப் போல தேவன் நிச்சயமாக உங்களை உயர்த்துவார். ''நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி, இரத்தஞ்சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ, அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்...'' (ஏசாயா 33:15,16)* ●

# MAN'S vs GOD'S PLAN



நான் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். சிறுவயது முதல் வேதம் வாசிப்பது, ஜெபிப்பது என்னுடைய அன்றாட வாழ்வில் உண்டு. ஆனால் எனக்கு படிப்பில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்க வில்லை. எனக்கு மருத்துவராக வேண்டும், ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது என்னுடைய கனவு. ஆனால் NEET Exam-ல் தோல்வி பெற்றதால் மருத்துவ படிப்பு பறிபோனது, கனவும் கலைந்தது. கர்த்தருடைய பிள்ளையாக வாழ்ந்து, அவருக்காக பரிசுத்தமாய் சாட்சியாய் வாழும் எனக்கு ஏன் தோல்வியும் ஏமாற்றமும் கிடைக்கிறது. அதே நேரத்தில் என் நண்பர்கள் மனம்போன வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மட்டும் எப்படி வெற்றியும், சந்தோஷமும் கிடைக்கிறது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. பரிசுத்தமாக, தேவனுக்கு பயந்து வாழ்வது வீணா? அல்லது உலகத்தில் உள்ளவர்களைப்போல நாமும் வாழ்ந்தால், நமக்கு எந்த தொந்தரவும் பிரச்சனையும் வராதா? நான் என்ன செய்ய வேண்டும்? மிகவும் குழப்பமாக இருக்கிறது

-ஆல்பர்ட், வேலூர்.

## Heart Beat

அன்பு தம்பி ஆல்பர்ட்! உங்களுடைய வாழ்க்கையில் ஆண்டவருக்கு பயந்து பரிசுத்தமாய் வாழ்ந்தும் பயன் இல்லையே என்ற வருத்தமும் துக்கமும் உங்களுக்குள் இருப்பது நன்றாக வெளிப்படுகிறது. மேலும் மருத்துவப் படிப்பும், சமுதாய தொண்டும் செய்ய வேண்டும் என்ற கனவும் கலைந்து விட்டதே என்ற வேதனையும் நன்கு புரிகின்றது. ஒரு பக்கம் ஒழுக்கமாக வாழும் உங்களுக்கு கிடைக்காத படிப்பும், பிரகாசமான எதிர்காலமும் தவறான வாழ்க்கை வாழும் உங்கள் நண்பர்களுக்கு கிடைக்கும்போது, தெய்வம் எங்கே? என்ற கேள்வி மனதின் ஆழத்திலிருந்து ஊற்றெடுப்பது தெரிகிறது.

நீங்கள் விரும்பிய படிப்பு கிடைக்கவில்லை என்பதால் நீங்கள் வாழ்க்கையில் தோற்று போனவர்கள் அல்ல. சமுதாயத்தில் அத்தனை பேரும் மருத்துவராகி விட்டால், கட்டிடம் கட்ட Engineer வேண்டாமா? விமானங்களை இயக்க Pilot's வேண்டாமா? நல்ல மாணவர்களை உருவாக்கும் சிறந்த ஆசிரியர்கள் வேண்டாமா? அனைவருமே நம் சமுதாயத்திற்கு வேண்டும்.



எனவே நீங்கள் முயன்ற மருத்துவம் கிடைக்கவில்லை என்பதற்காக விரக்தியின் உச்சத்திற்கு செல்வது சிறந்த செயல் அல்ல. மேலும் தற்பொழுது படிக்கின்ற படிப்பில் எப்படி வெற்றி பெறுவது என்பது உங்களின் நோக்கமாய் இருந்தால் உங்கள் எதிர்காலம் சிறப்பாக அமையும்.

## தேவ திட்டமும் மனித திட்டமும்

ஆல்பர்ட்! முதலாவது ஒரு காரியத்தை உங்களுக்கு சொல்கிறேன். நம்முடைய விருப்பம் ஒன்று உண்டு அது மனுஷ திட்டம் என்றும் சொல்லலாம். தேவனுடைய திட்டம் என்று ஒன்று உண்டு. அநேக நேரம் நம்முடைய விருப்பத்தை தேவனிடம் திணிப்போம். நம்முடைய திட்டம் நமது பார்வைக்கு சிறப்பாகவும் சீராகவும் தான் தெரியும். ஆனால் அதின் முடிவு விபரீதமாய் இருக்கும். **“மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்” (நீதி. 16:25).** நாம் போடும் திட்டம் பல நேரம் ஏன் வெற்றியாக முடியவில்லை என்பதற்கு காரணம் நமக்கேத் தெரியாது. அதிகமான கடின உழைப்பு, ஒரு கட்டுக்கோப்பான வாழ்வு போன்ற பல காரணம் இருந்தாலும் முடிவு தோல்வி. நாம் அநேக நேரம் plan பண்ணுவோம், ஆனால் End தெரியாது. So we assume it is the perfect plan.



## மற்றொரு பக்கம் - God’s Plan

அது எப்பொழுதும் நமக்கு ஆசீர்வாதமான ஒன்றாக இருக்கும். ஏனென்றால் God know the beginning & the end. அதனால் தான் நம்முடைய Best Proposal கூட God Reject பண்ணுகிறார். On the other side – God plan are always the Best plan.

**“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” (ரோமர் 8:28).** அதனால் உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் உங்களை கைவிடவில்லை, உங்கள் கனவையும் கலைக்கவில்லை, மாறாக இப்படி உங்கள் வாழ்க்கை இருந்தால் ஆசீர்வாதமாய் இருக்கும் என்பதால், இந்தப் பாதையில் கர்த்தர் உங்களை நடத்துகிறார்.

## நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியவை

- நான் நினைத்த வாழ்க்கை எனக்கு கிடைக்கவில்லை, அதனால் நான் ஏன் ஒழுக்கமாய் இருக்க வேண்டும் என்று சொல்லி தவறான வாழ்க்கையை தேர்தெடுக்காதீர்கள். அப்படி செய்தால் இன்னும் ஆபத்து நேரிடும்.

- வசனம் சொல்கிறது, **“பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப் போல் வாடிப்போவார்கள். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்” (சங்கீதம் 7:1,2,5).**

- உங்களுடைய நண்பர்கள் தற்சமயம் ஆசீர்வாதமாய் இருக்கலாம். ஒழுக் கமில்லாத அவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைத்துவிட்டதே என்று யோசிக்க



வேண்டாம். துன்மார்க்கனுடைய முடிவு வித்தியாச மானதாக இருக்கும். (துன்மார்க்கனுடைய வாழ்க்கை தற்சமயம் ஆசீர்வாதமாய் தோன்றும், ஆனால் அது நிரந்தரம் அல்ல, சடுதியில் அவர்கள் முடிவு வரும்).

- **“நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்” (நீதி. 4:18).** எனவே சோர்ந்து போக வேண்டாம். கர்த்தர் உங்களைக் கொண்டு செய்ய நினைத்ததை உங்களைக் கொண்டே செய்வார்●

**All the Best!**

சகோ.மோகன் சி.லாசரஸ்



# காரியத்தை வாய்க்கச் செய்யும் தேவன்...



**"சீட்டு மடியிலே போடப்படும்; காரியசித்தியோ கர்த்தரால் வரும்" (நீதிமொழிகள் 16:33).** தொழில், திருமணம், கர்ப்பத்தின் கனி, வேலை, மேற்படிப்பு, ஊழியம் என்று ஏதோ ஒரு காரியம் தடைப்பட்டு போகிறதே என்று கலங்கி போய் நிற்கிறீர்களா? என் மகனே(ளே) நான் காரியத்தைச் சித்திக்கப் பண்ணுவேன். நீங்கள் என்னதான் முயற்சி பண்ணினாலும், என்னதான் பிரயாசப்பட்டாலும் அதைச் சித்திக்கப் பண்ணுகிறவர் கர்த்தர்.

உசியா என்கிற ராஜாவின் வாழ்க்கையில் கர்த்தர் எல்லாவற்றையும் வாய்க்கப் பண்ணிர். காரணம் என்ன? **"தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான்; அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்" (2 நாளாகமம் 26:5).** உசியாவைக் குறித்து இன்னொரு அழகான காரியம் சொல்கிறது, 'அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் அவன் செய்வதெல்லாம் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார்.' நீ உன் முழு இருதயத்தோடு என்னைத் தேடினால் நான் உனக்கு வெளிப்படுவேன் என்று கர்த்தர் சொல்கிறார். நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்? ஆசீர்வாதத்தையா! கர்த்தரையா! நிறைய பேர் கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதத்தையே தேடுகிறோம்.

ஒரு கூட்டத்தில் தேசத்திற்காக ஜெபிக்கப் போனால் கூட எனக்கு சுகம் வேண்டும், எனக்கு ஆசீர்வாதம் வேண்டும், எனக்கு விடுதலை வேண்டும் என்று ஆசீர்வாதத்தைத்தான் தேடுகிறோம். ஆனால் ஆசீர்வாதத்தைக் கொடுக்கிற கர்த்தரைத் தேடும் போது, ஆசீர்வாதம் உங்களைத் தொடர்ந்து வரும். செல்வம், ஞானம், சுகம் என்று எல்லா ஆசீர்வாதமும் இயேசுவுக்குள் தான் இருக்கிறது. நீங்கள் வெறும் ஆசீர்வாதத்தைத் தேடாதபடி ஆசீர்வாதத்தைக் கொடுக்கிற கர்த்தரைத் தேட வேண்டும். அதைத்தான் கர்த்தர் விரும்புகிறார். 2 நாளா. 7:14ம் வசனத்தில், என் நாமம் தரிக்கப்பட்ட நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பி என் முகத்தைத் தேடுங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

கர்த்தர் மோசேயை வல்லமையாக பயன் படுத்துகிறார். கோலை நீட்டினால் தண்ணீர் இரத்தமாக மாறுகிறது. கோலை நீட்டினால் பேன்கள் வருகிறது, வெட்டுக்கிளிகள் வருகிறது, கடலை பிளக்க வைக்கிறார், மோசே கை நீட்டினால் கிட்டத்தட்ட 17 கிலோ மீட்டர் கடல் இரண்டாக பிளந்து நிற்கிறது. கர்த்தர் ஜனங்களை அதற்குள் நடத்துகிறார். எவ்வளவு பெரிய அற்புதம்! மோசே கோலினால் பாறையில் அடிக்க, 30 லட்ச மக்கள் குடிப்பதற்கு வேண்டிய தண்ணீர், மிருக ஜீவன்கள் குடிக்க வேண்டிய தண்ணீர் வனாந்திரத்திற்குள்ளிருந்து ஆறாக ஓடி வருகிறது. அப்படிப்பட்ட அற்புதங்களைப்

பார்த்த மோசே, நான் உம்முடைய முகத்தை பார்க்க வேண்டும் அதுதான் எனக்கு முக்கியம் என்று சொல்கிறார்.



முழு இருதயத்தோடு என்னைத் தேடினால் என்னை பார்ப்பீர்கள் என்று இயேசு சொல்கிறார். ஐந்து நிமிடத்தில் பார்த்துவிட முடியாது. உபவாசம் பண்ணி காத்திருங்கள், அதிகாலையில் அவரைத் தேடுங்கள், விலைக்கிரயம் கொடுத்து, கர்த்தருடைய பாதப்படியில் காத்திருக்கும்போது, நீங்கள் அவரைத் தரிசிக்கவும், அவேராடு பேசவும் முடியும். நீங்கள் அவரைப் பார்ப்பதைவிட தன்னை வெளிப்படுத்த இயேசு மிகவும் ஆவலோடு இருக்கிறார்.

ஒரு ஊருக்கு ஊழியத்திற்கு சென்றபோது, ஒருவர், ஐயா! உங்களைப் பார்ப்பதற்கு ஐந்து வருடங்களாக ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன் என்றார். ஐந்து வருடங்கள் இயேசுவைப் பார்க்க வேண்டுமென்று ஜெபித்திருந்தால் அவரைப் பார்த்திருக்கலாம். ஊழியக்காரரைப் பார்க்க முயற்சிப்பண்ணுகிற நீங்கள், இயேசுவைப் பார்க்க எவ்வளவு நேரம் காத்திருக்கிறீர்கள்? ஒரு ஊழியக்காரரைத் தேடுகிற அளவிற்கு கூட நாம் இயேசுவைத் தேடுவதில்லை. இயேசுவைப் பார்க்க முடியாது, பேச முடியாது என்று தவறாக புரிந்துக் கொண்டிருக்கிறோம். அவரைத் தரிசிக்க முடியும். அவர் நமக்கு வெளிப்படுத்ததான் ஏழ்மையின் கோலமெடுத்து வந்தார். சாது சுந்தர் சிங் தன் முழு இருதயத்தோடு தேடினதினால் அவருக்குத் தன்னை வெளிப்படுத்தினார். குல்ஷான் எஸ்தர் என்கிற ஒரு முஸ்லீம் சகோதரி கர்த்தரைத் தேடினதினால் இயேசு பிரத்தியட்சமாய் வந்து தன்னை வெளிப்படுத்தினார். ஆண்டவரை அறியாத மக்கள் இயேசுவை விசுவாசித்து காத்திருந்து இயேசுவைத் தரிசிக்கிறார்கள். சில பரம்பறை கிறிஸ்தவர்கள், சோம்பேறி கிறிஸ்தவர்கள் தான் இயேசுவைத் தரிசிப்பதில்லை. கர்த்தருக்கு எவ்வளவு நேரம் கொடுக்கிறீர்கள்? காலையில் எழும்பி எவ்வளவு நேரம் காத்திருக்கிறீர்கள்? யோசித்துப் பாருங்கள்! செல்போனில் மணிக்கணக்காக உட்கார்ந்து பேசுகிறீர்களே, இயேசுவிடம் பேசுவதற்கு ஒரு மணி நேரமாவது கொடுக்கிறீர்களா? முழு இருதயத்தோடு யார் என்னை தேடுவார்கள்? நான் என்னை வெளிப்படுத்த வேண்டுமென்று காத்திருக்கிறார். பேருக்காக பைபிள் வாசிப்பு, பேருக்காக ஜெபம் என்று இருப்பவர்களோடு கர்த்தர் பேச முடியாது. அவருடைய பாதத்தில் அமர்ந்திருந்து அவர் பேச இடம் கொடுக்கும் போது கர்த்தர் பேசுவார். அப்போது நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும் உசியா ராஜா கர்த்தரை தேடினபடியினால் செய்ததெல்லாம் வாய்த்தது. நீங்கள் கர்த்தரை முழு இருதயத்தோடுத் தேடுங்கள். திருமணக் காரியத்திற்கு, வேலைக் காரியத்திற்கு ஊழியக்காரரைத் தேடாமல், முதலாவது கர்த்தரைத் தேடுங்கள். குடும்பமாக உபவாசித்து ஜெபித்துப் பாருங்கள், தொழில் காரியம் வாய்க்க வேண்டுமா? வாரத்தில் ஒருநாள் உபவாசித்து ஜெபிக்கும்போது, தேவன் அழகாக நடத்துவார். இயேசுவோடு வாழ்கிற வாழ்க்கையைவிட ஒரு இன்பமான வாழ்க்கை இந்த உலகத்தில் எதுவுமே கிடையாது.

**பிரியமான வாலிபர்களே! நாம் என்னதான் முயற்சிப் பண்ணினாலும், பிரயாசப்பட்டாலும் நம்முடைய திறமைகளை பயன்படுத்தினாலும், எத்தனை பேர் நமக்கு உதவி செய்தாலும் கர்த்தரால்தான் காரியத்தை வாய்க்கப்பண்ண முடியும்! எனவே கர்த்தர் சமுகத்தில் காத்திருந்து ஜெபியுங்கள். காரியங்களை வாய்க்கச் செய்வார்! விசுவாசத்தோடு ஜெபியுங்கள் ●**

# சங்கீதம்

(ஜெபத்தின் மூலம் துதி)

**அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதம் கவிதை நூல்களில் இரண்டாவது நூலான "சங்கீதம்" பற்றி சுருக்கமாகக் காணலாம்.**

**அறிமுகம்:**

ஆராதனை என்ற பொதுவான கருப்பொருளின் மூலமாக நம்பிக்கையும், ஆறுதலின் செய்தியையும் சங்கீதம் கொடுக்கிறது. அவைகள் சுருக்கமாக தேவனுடைய தன்மை மற்றும் செயல்களுக்கு தனிப்பட்ட முறையிலுள்ள உறவில் பயம் மற்றும் முறுமுறுப்பிற்கு மாற்று மருந்தாக உள்ளன. இஸ்ரவேலருடைய ஆராதனை, விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கை, இவைகளின் பிரதிபலிப்பாக சங்கீதம் இருக்கிறது. தேவனுடைய சமூகம், திட்டம், வாக்குத்தத்தம், தேவனின் தன்மை. இவைகளின் வெளிச்சத்தின் பொதுவான மனித அனுபவங்களை பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக சங்கீதம் இருக்கிறது.

**ஆசிரியர்:**

| | | |
|---|---|---|
| தாவீது | 78 | சங்கீதம் 1-41; 51-70; 86; 103; 108-110; 122; 124; 131; 133;138-145. |
| ஆசாப் | 12 | சங்கீதம் 50;73-83 |
| கோரா புத்திரர் | 12 | சங்கீதம் 42-49; 84-85; 87-88 |
| சாலொமோன் | 2 | சங்கீதம் 72; 127 |
| மோசே | 1 | சங்கீதம் 90 |
| எத்தான் | 1 | சங்கீதம் 89 |
| யாரென்று தெரியவில்லை | 44 | சங்கீதம் 71; 91-102; 104-107; 111-121; 123; 125; 126; 128-130; 132; 134-137; 146-150 |

**சங்கீதங்களின் சுருக்கம்**

புத்தகம் 1 – ஆராதனை சங்கீதம் (1–41 அதி.)

புத்தகம் 2 – விண்ணப்ப சங்கீதங்கள் (42–72 அதி.)

புத்தகம் 3 – விண்ணப்ப சங்கீதங்கள் (73–89 அதி.)

புத்தகம் 4 – துதியின் சங்கீதம் (90–106 அதி.)

புத்தகம் 5 – துதியின் சங்கீதம் (107–150 அதி.)

அதிகாரம்: 150 வசனங்கள்: 2,461 வார்த்தைகள்: 43,743

**ஐந்தாகமத்துடன் சங்கீதம்**

- மனிதனைக் குறித்தும், சிருஷ்டிப்பைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (1-41) - ஆதியாகமத்திற்கு ஒத்திருக்கிறது.
- இஸ்ரவேலைக் குறித்தும் அவர்களுடைய மீட்பைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (42-72) - யாத்திராகமத்திற்கு ஒத்திருக்கிறது.
- ஆராதனையைக் குறித்தும், தேவாலயத்தைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (73-89) - லேவியராகமத்திற்கு ஒத்திருக்கிறது.
- பூமியில் நம்முடைய பயணங்களைக் குறித்த சங்கீதங்கள் (90-106) - எண்ணாகமத்திற்கு ஒத்திருக்கிறது.
- துதித்தலையும், தேவ வார்த்தையைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (107-150) - உபாகமத்திற்கு ஒத்திருக்கிறது.

**சங்கீதங்களில் கிறிஸ்து**

இந்தப் புத்தகத்தில் வரப்போகிற மேசியா பற்றி பல குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது.

★ உயிர்த்தெழுதல் (16:10 வசனம்)
★ என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர் (22:1 வசனம்)
★ இயேசு கிறிஸ்துவின் பாடுகள் (22 அதி.)
★ எலும்புகள் முறிக்கப்படுவதில்லை (34:20 வசனம்)
★ காட்டிக் கொடுக்கப்படுவார் (41:9 வசனம்)
★ இரண்டாம் வருகை (118:26 வசனம்)
★ இயேசு ராஜாவாக அரசாளுவார் (2, 45, 72, 110 அதி.)
★ இயேசுவின் உயிர்த்தெழுதல் (16 அதி.)
★ இயேசு பரத்திற்கு ஏறிப்போதல் (68 அதி.)

ஜீலியட் கிளார்வின்




# சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்!

நாம் நற்செய்தியை அறிவிக்கும்பொழுது பலர் நம்மிடத்தில் கேள்விகளைக் கேட்டு நடைமுறை சிக்கல்களை உண்டாக்குவர். இப்படிப்பட்ட சிக்கலான கேள்விகளுக்கு சரியான பதில் கொடுத்து சுவிசேஷ ஊழியம் செய்வது எப்படி? என்பதனை கடந்த மாதங்களில் பார்த்துள்ளோம். இப்படிப்பட்ட கேள்விகளை எதிர்க்கொள்வது எப்படி? என்பதனை தொடர்ந்து இம்மாதத்திலும் நாம் காணவுள்ளோம்.

### 1. என் பாவங்களை விட முடியாது; நான் பெரிய பாவி!



நமது ஆத்தும ஆதாய ஊழியத்தில் நாம் சந்திக்கிற இந்த வகை ஜனங்கள் மகா பரிதாபமானவர்கள். ஏனென்றால், சில பாவங்கள் மனிதனை விடுவதில்லை. மது, மாது, சூது போன்ற பாவங்களில் சிக்கினவர்கள் ‘என்னால் மனந்திரும்ப முடியாது’ என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள்.

### இவர்களுக்கு நாம் கூற வேண்டிய பதில் என்ன?



‘‘இயேசு கிறிஸ்துவால் மாற்றமுடியாத பாவி என்று எவருமில்லை’’, ‘‘இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மன்னிக்க முடியாத பாவம் எதுவுமில்லை’’ எனவே, எவ்வளவு பெரிய கொடிய பாவியானாலும் மனந்திரும்ப முடியும், பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டு பரிசுத்தமாய் வாழமுடியும் என்ற நம்பிக்கையுள்ள வார்த்தைகளைக் கூறுங்கள்.

**’’...உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்’’ (ஏசாய 1:18).** எனவே, பாவங்களை விடமுடியாது என்று எவரும் தீர்மானிக்க வேண்டாம். மனந்திரும்பினால் கர்த்தர் மன்னிக்க வல்லவராயிருக்கிறார் என்று உறுதியாய் கூறுங்கள்.

### 2. கிறிஸ்தவர்கள் குறையுள்ளவர்கள்!

ஆத்தும ஆதாயம் செய்யும்போது நாம் சந்திக்கிற இன்னொரு வகையான மக்கள் விநோதமானவர்கள். கிறிஸ்தவர்களிடத்திலிருக்கிற குறைகளைக் கண்டுபிடித்து பேசி, நம்மை எதிர்த்து நிற்கிறவர்கள். ‘எங்களுக்கு நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம்; உங்கள் கிறிஸ்தவர்களுக்கு போய் சொல்லுங்கள்’ என்பார்கள்.

### இவர்களுக்கு நாம் கூற வேண்டிய பதில் என்ன?

‘ஒருவர் கிறிஸ்தவராய் பிறப்பதினால் கிறிஸ்தவராவதில்லை. மனந்திரும்பி இரட்சிக்கப்படும் போது, மெய்யான விசுவாசிகளாகிறார்கள். ஒரு வகுப்பிலுள்ள 50 மாணவர்களில் 100 மார்க் எடுப்பவர்களும் உண்டு, பூஜ்ஜியம் (Zero) மார்க் எடுப்பவர்களும் உண்டு. அதேபோல, வேதத்தை கையில் வைத்துக் கொண்டு கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் பூஜ்ஜியமாய் இருக்கிறவர்கள் உண்டு. நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று நல்ல நிலையில் ஜீவிப்பவர்களுமுண்டு. எனவே பூஜ்ஜியம் எடுத்தவர்களை நோக்காதிருங்கள். நூற்றுக்கு நூறு எடுப்பவர்களை மட்டும் கவனியுங்கள்’ என்று பொறுமையுடன் அவர்கள் சந்தேகம் நீங்கும்படி பதில் கூறுங்கள்.

**பரிசுத்த ஆவியானவர் உங்களோடிருந்து எதிர் பேசுகிறவர்கள் மனந்திரும்பும்படி கிருபைக்குள் நடத்துவார். எனவே தைரியமாய் சுவிசேஷம் அறிவிப்போம்; அதற்கான பலனை பரலோகத்தில் பெறுவோம்! ●**



# மௌன யுத்தம்

## அபிகாயில்-6

அபிகாயில் என்ற பெயரில் வேதாகமத்தில் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். ஒன்று தாவீதின் சகோதரியும், இஸ்மவேலியனாகிய யெத்தேரின் மனைவியும், அமாசாவின் தாயுமான அபிகாயில் (1 நாளா. 2:16,17). இவர்களைக் குறித்து வேதாகமத்தில் அதிகமாக கூறப்படவில்லை. மற்றொன்று கர்மேல் ஊரானான நாபாலின் மனைவியான அபிகாயில். இந்த அபிகாயில் இன்று நாம் தியானிக்கும் வேத கதாபாத்திரம் (1 சாமு. 25). அபிகாயில் என்ற பெயருக்குரிய அர்த்தம் 'மகிழ்ச்சிக்குரியவர்' என்பதாகும். இவர்களை வேதாகமம் 'மகா புத்திசாலியும், ரூபவதியும்' என்று குறிப்பிடுகிறது. ஆனால் இவர்களது கணவனாகிய நாபால் விசுவாச வீரனாகிய காலேபின் சந்ததியாக இருந்தாலும் முரடனும், மதுபான வெறியனும், பணக்கார துன்மார்க்கனுமாய் இருந்தார். உதவியாக இருந்த தாவீதையும் அவரது வீரர்களையும் இழிவாகப் பேசி நன்றி மறந்ததோடு, பழிச் சொற்களையும் கூறி தனது அகங்கார பேச்சினால் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் அழிவைச் சம்பாதித்தவர். தனது பெயருக்கு ஏற்றார்போல் பைத்தியமாகவே செயல்பட்டவர். ஆனால் இப்படிப்பட்ட கணவருக்கு வாய்த்ததோ அழகான, அறிவுள்ள விசுவாசமுள்ள ஒரு மனைவி. நாபாலிடம் உதவிக் கேட்டு வந்த தாவீதின் ஆட்களுக்குக் கடுமையான பதில் கூறியதால், பேரழிவு தனது குடும்பத்தைச் சூழ்ந்துக் கொண்டதை அறிந்தவுடன் தாமதிக்காமலும், காரணங்கள் கூறி நேரத்தை வீணடிக்காமலும் துரிதமாக செயல்படுகிறாள். அப்பொழுது அவள் மனதின் குரல் இவ்வாறு ஒலித்திருக்கலாம்.





**குரல் 1:** என்ன செய்வது? தாவீதின் ஆட்கள் வந்திருந்ததை கவனியாமல் அலட்சியமாய் இருந்து விட்டேனே?



**குரல் 2:** அதினால் என்ன? என்ன செய்து விடப் போகிறார்? மட்டுமல்ல நானோ ஒரு பெண், என்னால் என்ன செய்ய முடியும்?



**குரல் 1:** தாவீது ஒரு போர் வீரன், தன்னுடைய ஆட்களோடு வந்து என் வீட்டாரையும், வேலைக்காரரையும், கால்நடைகளையும் உடைமைகளையும் அழித்து விட்டால்... ஐயோ! நினைக்கவே பயமாய் இருக்கிறதே!

**குரல் 2:** அப்படியெல்லாம் செய்யமாட்டார். அவர் ஒரு தேவ மனிதர், இரக்கமுடையவர், தேவனுக்குப் பயப்படுகிறவர். உணவுப் பொருட்களை ஆயத்தமாக வைத்து, வந்தவுடன் கொடுத்து விட்டால் போதுமே. உணவுப் பொருட்களையும் இன்று இரவு தூங்கி விட்டு நாளைக் காலையில் எழுந்து ஆயத்தம் செய்து விட்டால் போதும் என்று கருதுகிறேன்.





**குரல் 1:** இல்லை... இல்லை அசட்டையாக இருந்து விடக்கூடாது. துரிதமாய், ஞானமாய் செயல்பபட்டு, ஏதாவது செய்தே ஆக வேண்டும்.



**குரல்2:** தாவீதுடன் இருக்கும் ஆட்கள் குறைவானவர்கள் தானே, நாம் நம்மிடமுள்ள வேலைக்காரர்களை வைத்து சமாளித்து விடலாமே! நாம் ஏன் பதற்றப்பட வேண்டும். ஊர் எல்லையில் காவலுக்கு வேலைக்காரர்களை நிறுத்திவிட்டால் என்ன?



**குரல் 1:** ஒருவேளை சடிதியாக அழிவு வந்து விட்டால் என்ன செய்ய முடியும்? தாவீதும் அவர் ஆட்களும் மகா கோபத்துடன் அல்லவா இருப்பார்கள். பழிவாங்கும் எண்ணத்துடன் இருந்தால்... என்ன செய்வது? வேலைக்காரரிடம் உணவுப் பொருட்களைக் கொடுத்து அனுப்பினால் என்ன? ஆனால்... கோபத்தை எப்படி தணிக்க முடியும்? அவர்களைச் சாந்தப்படுத்துவது எப்படி? ஒன்று செய்யலாம். நானே புறப்பட்டு சென்று, முதலாவது உணவுப் பதார்த்தங்களைக் கொடுத்து அனுப்பி, கோபம் தணிந்தவுடன் பின் என்னைத் தாழ்த்தி, என் கணவருக்காக நான் மன்னிப்பு கோருவேன். பின் தேவ வார்த்தைகளைக்கூறி பழிவாங்க வேண்டாம் என்று மன்றாடி எப்படியாவது என் வீட்டின் மேல் வரும் அழிவைத் தடுத்தாக வேண்டும்.



இவ்வாறு தன் மனதில் நடந்த மௌன யுத்தத்தில் நல்மனச்சாட்சி கூறிய அறிவுரையை ஏற்று துரிதமாய் செயல்பட்டு தன் கால்நடைகளான 3000 ஆடுகள், 1000 வெள்ளாடுகள், அதனை பாராமரிக்கும் வேலையாட்களையும் வீட்டார் அனைவரையும், தன் கணவர் அவருடைய நாவினால் சம்பாதித்த அழிவைத் தன்னுடைய நாவைப் பணிவாய், ஞானமாய் கேடகமாய் உபயோகித்து அழிவிலிருந்து மீட்கிறாள்.

இதனை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பான வாலிப சகோதர, சகோதரியே இன்றும்கூட மெய்யான தேவனாகிய இயேசு கிறிஸ்துவை அறியாமல் மரணத்திற்கு பின் நித்தியமான வாழ்வு ஒன்று உண்டு என்பதை உணராமல் நித்திய நரகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் நண்பர்கள், உறவினர்கள், வேலைக்காரர், அயலகத்தார், உடன் பணிபுரிபவர்கள் எத்தனை பேர்? தன்னுடைய குடும்பத்தாரோ, வேலைக்காரரோ அழிந்து விடக்கூடாது என்பதற்காக தான் ஒரு பெண் என்றோ அல்லது குடிகாரனின் மனைவி என்றோ காரணம் சொல்லாமல், பொழுது விடியுமட்டும் காத்திருக்காமல் துரிதமாய் செயல்பட்ட அபிகாயில், தனது பெயருக்கு ஏற்றார்போல் அநேகருடைய 'மகிழ்ச்சிக் குரியவராகவே' வாழ்ந்திருக்கிறார். உங்களைச் சார்ந்தவர்கள் மெய்யான தேவனை அறிந்துக்கொள்ள இன்று நீங்கள் என்ன செய்கிறீர்கள்? காலத்தின் அவசரத்தைப் புரிந்து செயல்படாவிட்டால், அன்புக்குரியவர்களின் ஆத்துமாக்களின் நிரந்தர கண்ணீருக்கு நீங்களே காரணமாகி விடுவீர்கள். சிந்தியுங்கள்! உங்கள் அன்புக்குரியவர் களுக்காக பாரத்துடன் ஜெபியுங்கள். துரிதமாய் சுவிசேஷம் அறிவியுங்கள். இயேசுவின் வருகைக்கு

*ஆயத்தமாகுங்கள்!*

*ஆயத்தப்படுங்கள்!!*

சிந்திக்க: நீங்கள் உங்கள் குடும்பத்துக்கு

*நாபாலா? அபிகாயிலா?*

## அக்கினியாய் வெளிப்பட்ட மெய் தேவன்



1 இராஜாக்கள் 17ம் அதிகாரத்தில், எலியாவின் சரித்திரம் ஆரம்பிக்கிறது. எலியாவின் நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விட்டு பின்வாங்கி பாகால்களை வழிபட ஆரம்பித்துவிட்டனர். கர்த்தர் தமது ஜனத்தை மீண்டும் தம் பக்கம் திருப்ப எலியாவை எழுப்பினார். பாகாலின் தீர்க்கதரிசிகள் சுமார் 450 பேரும், தோப்பு விக்கிரக தீர்க்கதரிசிகள் சுமார் 400 பேரும் மற்றும் இஸ்ரவேல் ஜனம் அனைவரும் கர்மேல் பர்வதத்தில் கூடிவர செய்து, அக்கினியால் பதில் தரும் தேவனே மெய்யான தேவன் என்று எலியா சவால் விட்டார். பாகாலின் தீர்க்கதரிசிகள் காலை முதல் மதியம் வரை கூக்குரலிட்டும் அக்கினி வரவில்லை. பின்பு எலியா பலிபீடத்தை செப்பனிட்டு, கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோது, வானத்திலிருந்து அக்கினி இறங்கி பலிபீடத்தை பட்சித்தது. அந்த நாளில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

**வாலிபர்களே! எலியாவின் தேவன் வல்லமை மாறாதவராக இன்றும் நம்மோடு இருக்கிறார். தேசத்தில் இயேசுவை அறியாத ஜனங்கள் அறியாமையிலும், தவறான நம்பிக்கையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், அவர்கள் விசுவாசிக்கத்தக்க அற்புத அடையாளங்களை செய்ய கர்த்தர் எலியாக்களை தேடிக் கொண்டிருக்கிறார். எழும்ப நீ ஆயத்தமா?**

''ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம் என்றார்கள்'' (1 இராஜா. 18:39).



## அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த மெய் தேவன்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலின் ஜனங்களை விடுவிக்க தேவன் மோசேயை அனுப்பினார். பார்வோனிடம் ஜனங்களை விடுவிக்க முறையிட்டபோது, கர்த்தர் பார்வோனின் இருதயத்தை கடினப் படுத்தினார். பின்பு வாதைகளை அனுப்பி தன்னுடைய வல்லமையை விளங்கப்பண்ணினார். அக்காலத்தில், எகிப்து தேசம் தான் உலகின் வல்லமை படைத்த தேசமாக இருந்தது. அதை எதிர்த்து நிற்க யாராலும் முடியாத ஒரு ராஜ்யமாக திகழ்ந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அடிமையாக இருக்கும் ஒரு ஜனக்கூட்டம் பார்வோனை எதிர்த்து தேசத்தைவிட்டு வெளியே வருவது என்பது சாதாரண விஷயம் அல்ல. அப்படிப்பட்ட எகிப்து தேசத்தையும், தலைக்கனம் பிடித்த பார்வோன் இராஜாவின் அஸ்திபாரத்தையும் கர்த்தருடைய கரம் அசைத்துவிட்டது. தம்முடைய ஓங்கிய புயத்தினாலும், பலத்த அடையாளங்களினாலும் இஸ்ரவேல் ஜனத்தை கர்த்தர் விடுவித்து கொண்டு வந்தார். இதனிமித்தம் இஸ்ரவேலின் தேவனே மெய்யான தேவன் என்றும், அவர் வல்லமையுள்ளவர் என்றும் சுற்றிலுமுள்ள ஜனங்கள் அறிந்து கொண்டனர்.

**வாலிபர்களே! நம் தேசத்திலும்கூட பாவத்தின் பிடியிலும், சாபத்தின் கட்டுகளிலும் கோடிக்கணக்கான ஜனங்கள் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களை விடுவிக்கவும், இயேசு தான் மெய்யான தெய்வம் என்பதை அறிவிக்கவும் தேவன் வாலிபர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். புறப்பட ஆயத்தமா?**

''...பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்'' (யாத். 14:13).

## விஞ்ஞானிக்கு தன்னை வெளிப்படுத்தின மெய் தேவன்



### பிரான்சிஸ் காலின்ஸ்

இதுவரை உலகம் அநேக கண்டு பிடிப்புகளைப் பார்த்து வியந்திருக்கிறது. கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களாக இருப்பார்கள். விஞ்ஞானத்தின்மீதும் தங்கள் ஞானத்தின் மீதும் அதிக நம்பிக்கை வைப்பதினால் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களாக இருப்பார்கள். கடவுள் இல்லையென்று தர்க்கமும் செய்வார்கள். இதேபோல் கடவுள் நம்பிக்கையற்று வாழ்ந்த அமெரிக்க மருத்துவர் மற்றும் மரபணு ஆராய்ச்சியாளரான டாக்டர். பிரான்சிஸ் காலின்ஸ் என்பவர் தன்னிடம் சிகிச்சை பெற வந்த வயதான பெண்மணி,⊠ தன் வாழ்க்கையில் இயேசு செய்த அற்புதத்தை விவரித்து சொன்னார். அதைக் கேட்ட பிரான்சிஸ் கடவுள் என்பவர் உண்மையில் இல்லை என்று நிரூபித்து காட்ட வேண்டும் என ஆராய்ச்சியைத் துவக்கினார். ஆனால் ஆராய்ச்சியின் முடிவில் இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அநேகருக்கு தனது சாட்சியை அறிவித்து, இயேசு தான் மெய்யான தேவன் என்று பல்வேறு அறிவியல் ஆதாரத்தோடு விவரித்து சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**வாலிபர்களே! இன்றைக்கும் தேவன் உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் தம்மை வெளிப்படுத்தி, மெய்யான தேவன் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.**

'உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்'' (எரேமியா 29:13).



## கணித மேதையின் கண் திறந்த மெய் தேவன்

### சார்லஸ் பாபேஜ் (கணினியின் தந்தை)

இவருடைய கண்டுபிடிப்பு, அதற்கு பிறகு கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து கணினிகளுக்கும் அடிப்படையாக அமைந்தது. சார்லஸ் பாபேஜ் கணித மேதை மட்டுமில்லாது, தேவனின் சிருஷ்டிப்பிலுள்ள அற்புதங்களை விவரித்து எழுதியிருக்கிறார், அதுமாத்திரமல்ல இயற்கைக்கு மேற்பட்ட அற்புதங்கள் இல்லை என்று சொல்லும் விஞ்ஞானிகள் மற்றும் அனைவருக்கும், அற்புதங்கள் நடப்பது உண்மை என்றும், அதை தேவன் இன்றும் செய்கிறார் என்று தன்னுடைய சுயசரிதையில் எழுதியிருக்கிறார். பல அறிவியல் மற்றும் கணித ஆதாரங்களோடு தேவன் இன்றும் அற்புதங்கள் மற்றும் அதிசயத்தைச் செய்கிறார் என்று விவரித்திருக்கிறார்.

**வாலிபர்களே! உலகிலேயே தலைசிறந்த விஞ்ஞானியாக திகழ்ந்தாலும், தன்னை இரட்சித்த இயேசுவை குறித்து சாட்சி பகிர சார்லஸ் பாப்பேஜ் தயங்கவில்லை. இன்றைக்கு தேவனிடம் அநேக நன்மைகளை அற்புதங்களைப் பார்த்த பின்பும் இயேசுவை அறிவிக்க தயங்குவோமானால், அது எவ்வளவு பெரிய பாவமாக இருக்கும். நமக்கு தெரிந்த, நாம் ருசி பார்த்த மெய்யான தெய்வமாகிய இயேசுவை உலகிற்கு சாட்சியாக அறிவிப்போம். எழுப்புதலுக்கு வித்திடுவோம்.**

''கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள். ...அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்'' (சங்கீதம் 105:1,2)

# வெற்றிப் படிகள்!








**எதிர்கால சாதனையாளர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் உங்களை வெற்றிக்கு நேராக ஓட தூண்டி கொண்டிருப்பீர்கள் என நம்புகின்றேன்.**
**இந்தச் சாதனையாளரின் வெற்றி வாழ்க்கையும் உங்களை உற்சாகப்படுத்தி, தன்னம்பிக்கையூட்டி வெற்றிப் பாதைக்கு அடித்தளம் இடும் பகுதியாக அமையட்டும்!**

மும்பையில் 100 சதுர அடி உள்ள ஒரு சிறிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு இந்தியா மட்டுமல்லாமல் UK, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் தன்னுடைய கிளைகளை வைத்திருகின்ற நிறுவனம், அநேகருக்கு எளிதாக அறியப்படும் நிறுவனம் Ola Cabs. பவிஷ் அகர்வால் பஞ்சாபிலுள்ள லூதியானாவில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் மருத்துவர்கள். இவர் B. Tech. Computer Science படித்து விட்டு Microsoft Research Center–ல் 2 வருடம் பணியாற்றினார். நல்ல படிப்பு, கவுரவமான வேலைஇருந்தாலும்அகர்வால்வாழ்க்கையில் ஏதோ ஒரு வெறுமைக் காணப்பட்டது. சுவாரஸ்யம் இல்லாமல் இருப்பதை அவர் உணர்ந்தார். நாம் வளருவதற்கு என்ன செய்ய வேண்டும் என ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார். வாழ்க்கையில் எப்படியாவது பெரிய ஆளாக வேண்டும் என்று எண்ணி தான் Microsoft Center–ல் பார்த்து வந்த வேலையை கைவிட்டு டிராவல் சம்மந்தமாக ஏதாவது ஒரு Business பண்ணலாம் என்று முடிவு எடுத்தார். எனவே அதிகமான இடங்களுக்கு டிராவல் செய்து அதைப் பற்றி ஆராய்ச்சியும் செய்தார். கடைசியாக Ola Trips Com என்ற வெப்சைட்டை அறிமுகம் செய்கிறார். இந்த வெப்சைட்டில் இந்தியாவில் எங்கு டிராவல் பண்ணினால் எவ்வளவு Package என்ற விவரங்கள் அடங்கிய வெப்சைட்டை உருவாக்கினார். ஆனால் இந்த வெப்சைட் மக்களிடம் போய் சென்றடையவில்லை. எனவே இந்த வெப்சைட்டை Promote பண்ண தயாராகி மக்கள் அதிகம் கூடும் இடம் நோக்கி விரைந்தார். 2010ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற Common wealth போட்டியைப் பார்க்க அநேக ரசிகர்கள் கூடியிருந்த மைதானத்தின் வெளியில் காலையில் இருந்து மாலை வரை Pam மூலம் தன்னுடைய வெப்சைட்டை விளம்பரப்படுத்தினார். ஆனால் அன்று ஒரு Package கூட விற்பனையாகவில்லை.



இதனால் சோர்ந்துப் போன அகர்வால் தன்னை தானே உற்சாகப்படுத்த அவரே பெங்களூரிலிருந்து பந்திப்பூர் வரைக்கும் ஒரு Rental காரை எடுத்து பிரயாணத்தைத் தொடங்கினார். திடீரென்று

கார் டிரைவர் நடு வழியில் காரை நிறுத்தி இருவரும் பேசி வந்த தொகையைவிட அதிகமானத் தொகையை கேட்டார். ஆனால் அகர்வால் பேசின தொகையை விட கொஞ்சம்கூட அதிகமாக கொடுக்க முடியாது என மறுத்து விட்டார். அந்தக் கார் டிரைவர் அகர்வாலை பாதி வழியிலேயே விட்டு விட்டு சென்று விட்டார். அப்பொழுது தான் அகர்வால் சாதிப்பதற்கு ஏதுவான வழிகள் தென்பட ஆரம்பித்தன. இந்தியாவில் Travel Package கொடுக்க நிறைய கம்பெனிகள் இருக்கிறது. ஆனால் சரியான கட்டணத்திற்கு டிராவல் பண்ணக் கூடிய Cabs மிகவும் குறைவு என்பதை ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு கண்டுபிடித்தார். டிரைவருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் Cabs arrange செய்வது போல ஒரு கம்பெனியை ஆரம்பிக்கலாம் என்று யோசித்து தன்னுடைய நண்பருடன் இணைந்து டிசம்பர் 3, 2010ஆம் ஆண்டு Ola Cabs-யை தொடங்கினார்.





**ஆரம்பத்தில் குறைவான டிரைவர்கள் இருந்ததால் Ola Cabs இல்லாத நேரத்தில் Booking வந்தால் அகர்வால் தன்னுடைய நண்பரிடம் இருந்து Cabs வாங்கி பயணிகளை Pick up and drap பண்ணுவார்**

மும்பையில் ஒரே ஒரு அறை கொண்ட வீடு ஒன்றில் அகர்வாலும் அவர் நண்பரும் அலுவலகத்தைத் தொடங்கினர். காலையில் அலுவலகம், இரவில் படுக்கும் இடம் அப்படித்தான் இயங்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் குறைவான டிரைவர்கள் இருந்ததால் Ola Cabs இல்லாத நேரத்தில் Booking வந்தால் அகர்வால் தன்னுடைய நண்பரிடம் இருந்து Cabs வாங்கி பயணிகளை Pick up and drap பண்ணுவார். கொஞ்ச காலம் நன்றாக சென்ற நிறுவனம் சில நாளைக்குப் பிறகு பெரும் பாதிப்பை அடைந்தது.




பயணிக்கும் பயணிகளுக்கு செல்ல வேண்டிய வழித் தெரியாமல் தவிக்கும் சூழ்நிலை உருவானதால், ஒருசில பிரச்சனைகளைச் சந்திக்க ஆரம்பித்தார். ஆழ்ந்த தேடலுக்குப் பிறகு Ola Cabs & Ola Autoல் Gas, Wifi, Online payment தான் செல்லும் வண்டியை Track பண்ணுவது போன்ற அநேக செயலிகளை Ola Cabs.com-ல் சேர்த்தார். இதனால் அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்து அநேகருக்கு வேலை வாய்ப்புகளையும் கொடுத்துக் கொண்டு வருகிறது. 60 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் Ola உடன் இணைந்துள்ளது. 10 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் 110 நகரங்களில் ஓலா நிறுவனத்திற்காக ஓட்டுகிறவர்கள், மற்றும் 6000 பேர் அலுவலகத்திலும் பணிபுரிகிறார்கள். ஆனால் Ola Cabs நிறுவனர் இன்று வரை தனக்கென்று ஒரு கார் கூட வாங்கவில்லை. தினமும் தன்னுடைய அலுவலகத்திற்கு Ola-வை புக் செய்து அதில் பணம் செலுத்தி செல்கின்றார் என்பது சுவாரஸ்யமான ஒன்று.

**இந்த உலகத்திலுள்ள அனைவருக்கும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் நிச்சயம் இருக்கும். ஆனால் அவற்றை அடைய வேண்டுமென்ற ஆசைகள், உந்துதல்கள் பல பேரிடம் இல்லை. வாழ்க்கையில் வரும் கஷ்டங்கள் மற்றும் சவால்களை ரசிக்க கற்றுக் கொள்ளும்போது, சுவாரஸ்யம் நிறைந்த வெற்றி வாழ்க்கை வாழ முடியும் ●**

நிகழ்வு

ஜீலியட் கிளார்வின்

# வேதமும், விஞ்ஞானமும்!

**நட்சத்திரங்களை உங்களால் எண்ண முடியுமா?**

**(Can you count Stars?)**

சிறு வயதில் நட்சத்திரங்களை எண்ணியவர்களா நீங்கள்? உங்களுக்கான வேதாகம உண்மை இதோ!

அந்தந்த காலங்களில் வாழ்ந்த அறிஞர்கள் நம்மைப் போலவே நட்சத்திரங்களை எண்ண முயன்றனர்.

- கி.மு.150-ல் வாழ்ந்த ஹைபர்கஸ் என்பவர் 1022 நட்சத்திரங்கள் நம் அண்டத்தில் இருப்பதாக எண்ணினார்.
- பின்பு Ptolemy என்பவர் 1026 நட்சத்திரங்கள் உண்டு என கூறி வந்தார்.
- ஆனால் Galileo என்பவர் தனது தொலைநோக்கி (**TELESCOPE**) வழியாய் பார்த்த போது கோடானக்கோடி நட்சத்திரங்கள் எண்ணிலடங்காததாயிருக்கிறது என்பதை கண்டுப்பிடித்தார்.

இதனை வேதாகமத்தில் எரேமியா புஸ்தகத்தில் **"வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததாயிருக்கிறது" (எரேமியா 33:22)** என்று கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்தியதை எழுதியிருக்கிறார்.

இப்படிப்பட்ட கண்டுப்பிடிப்பை தொலை நோக்கி கண்டுப்பிடிப்பதற்கு முன்பே வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதே நாம் அறிய வேண்டிய சத்தியம்.

**கடலின் ஆழத்தில் நீரூற்று இருப்பது உங்களுக்குத் தெரியுமா?**

நிலத்தின் அடியில் உள்ள நீரூற்றை நாம் அநேகர் கண்டதுண்டு. ஆனால் சமுத்திரத்தின் அடியில் இருக்கும் நீரூற்று பற்றிய உண்மை உங்களுக்குத் தெரியுமா?

1977-ல் சில ஆராய்ச்சியாளர்கள் பெரு என்ற நாட்டின் நீர்மூழ்கிக் கப்பலை (**SUBMARINE**) பயன்படுத்தி கடலின் ஆழம் மட்டும் சென்று அநேக நீரூற்றுகளை கண்டார்கள். அது அநேகருக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டுப்பண்ணினது.

அப்படியிருக்க, 4000-ம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வேதாகமத்தில் **"நீ சமுத்திரத்தின் ஆழத்திலுள்ள நீரூற்றுகளின் அருகே நடந்தாயோ" (யோபு 38:16)** என்று கூறப்பட்டுள்ளது. நீர்மூழ்கி கப்பல் இல்லாத காலத்திலேயே சமுத்திரத்தின் ஆழத்தில் உள்ள நீரூற்றுகளைப் பற்றி கூறியிருப்பது எவ்வளவு மகத்தானது.

**வேதத்தை நேசிப்போம் சாட்சியாய் வாழ்வோம்!**



ஹைபர்கஸ்



PTOLEMY



GALILEO



SUBMARINE)

ரெபேக்கா டேவிட்

# கொஞ்சத்தில் உண்மை!



ஜெராட் ஆடு மேய்க்கும் மிகவும் ஏழ்மையான சிறுவன். தன் வேலையில் உண்மையுள்ளவனாக இருந்தான். ஒரு பள்ளத்தாக்கின் அருகில் தன் ஆட்டு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்தான். அருகில் மரங்களும், புதர்களும் நிறைந்த ஒரு காடு இருந்தது. அதனுள்ளிருந்து ஒரு வேட்டைக்காரர் வெளியே வந்து, ''தம்பி, இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்திற்கு செல்ல எவ்வளவு தொலைவு'' என்று ஆடு மேய்க்கும் சிறுவனிடம் கேட்டார். ''ஆறு மைல் தூரம் செல்ல வேண்டும், ஆனால் ஆடுகள் செல்லும் தடம்தான் அந்த கிராமத்திற்கு செல்லும் பாதை என்பதாக சொன்னான். அந்த வழி மிகவும் கடினமான பாதை, எளிதில் பாதை தவறி போய்விட முடியும்'' என்பதாகவும் சொன்னான்.

தனி வழி போகும் பாதையாகத் தெரியவில்லை என்பதை வேட்டைக்காரர் பார்த்தார். மீண்டும் அவர், ''தம்பி, நான் மிகவும் களைப்பாக இருக்கிறேன், நண்பர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை, உன் ஆடுகளைச் சற்று நேரம் விட்டு விட்டு எனக்கு வழிகாட்டு, நான் உனக்கு நிறைய சன்மானம் தருகிறேன்'' என்றார்.

உடனே சிறுவனும், ஐயா! உங்களுக்கு உதவி செய்ய எனக்கு ஆசைதான், ஆனால் என் ஆடுகளை தனியாக விட்டால் கொடிய மிருகங்கள் அவைகளைக் கொன்று விடும் என்று மறுமொழி கூறினான்.

தம்பி, அதனால் என்ன? அவை உன் ஆடுகள் அல்லவே.



உன் முதலாளிக்கு பெரும் நஷ்டம் ஏற்படாதபடி, ''நஷ்டத்தைவிட பல மடங்கு சன்மானம் நான் உனக்குத் தருகிறேன், எப்படியாவது நீ எனக்கு உதவி செய்துதான் ஆக வேண்டும்'' என்றார்.

''மன்னிக்க வேண்டும் ஐயா, என் எஜமான் என்னை நம்பி இந்த ஆடுகளை என்னிடம் ஒப்படைத்துள்ளார். உங்களுக்கு உதவி செய்ய வந்தால், அது நம்பிக்கை துரோகமாகும். அது காலத்தைக் களவாடிய செய்கையுமாகும். அந்த நேரத்தில், எந்த ஆடாவது தொலைந்து போனால், அது நானே அதைத் திருடிய குற்றத்திற்குச் சமமாகும்'' என்றான் சிறுவன். பெரியவர் எப்படியாவது அவன் உதவியைப் பெற விரும்பினார். ஆனால் சிறுவனின் பதில் தம் வாயை அடைத்து விட்டது. அதேநேரம் அவன் உண்மையினிமித்தம் அவர் உள்ளத்தில் மகிழ்ச்சிக் கொண்டார். ''தம்பி, ஒருநாளும் உன்னை மறக்கமாட்டேன் பாதையைக் காட்டு, நானே போக முயற்சிக்கிறேன்'' என்றார் பெரியவர். அப்போது, அவரைத் தேடி அலைந்த நண்பர்களும், அங்கு வந்து சேர்ந்தார்கள். அடுத்த சிறிது நேரத்தில், அந்தப் பெரியவர் அந்நாட்டின் மன்னன் என்றும், அந்தப் பள்ளத்தாக்கும், நாடுகளும் அவருக்கே சொந்தமென்றும் தெரிந்து கொண்டான் சிறுவன் ஜெராட்.

வீடு திரும்பிய மன்னன் ஜெராட்டை அழைத்து அவனைப் படிக்க வைத்தார். சிறுவன் ஜெராட் நன்கு படித்து உயர்ந்த நிலையை அடைந்தான். தன் ஏழ்மை நிலையிலும் உண்மையை அவன் கைவிடவில்லை.

**''...கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்...'' (மத்தேயு 25:21).**

*அன்பான வாலிப தம்பி, தங்கச்சி! இந்தச் சின்னத் தம்பியின் உண்மையினிமித்தம் அவன் வாழ்க்கையில் உன்னத நிலையை அடைய முடிந்தது. நீங்களும் சிறு சிறு காரியங்களில் உண்மையாக இருக்கும்போது, மெய்யான தேவன் உங்களையும் உன்னத நிலையில் வைப்பார்! உண்மையாக இருங்கள்!* ●

எஸ்தர்

# ஜெபக்கையேடு

## செப்டம்பர் 2021

## இடைநிற்கும் மாணவர்கள்

- நாடு முழுவதும் அரசு, தனியார் துறைகளைச் சேர்ந்த 15 லட்சத்துக்கும் மேற்பட்ட பள்ளிகள் செயல்படுகின்றன.
- சுமார் 97 லட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.
- ஆரம்பக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை மொத்தம் 26.5 கோடிக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் படித்து வருகின்றனர்.
- இதில் 44.3% பேர் அரசுப் பள்ளிகளிலும், சுமார் 20% மாணவர்கள் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், 35% பேர் தனியார் பள்ளிகளிலும் படித்து வருகிறார்கள். 3.8 கோடி மாணவர்கள் உயர்நிலைப் படிப்பில் சேர்ந்துள்ளனர்.
- நாட்டில் சுமார் 30% மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக் கல்வியிலிருந்து மேல்நிலை கல்விக்கு செல்வதில்லை.



## ஜெபக்குறிப்புகள்

1. நாட்டில் செயல்பட்டு வரும் சுமார் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளும் நல்ல முறையில் கல்வி கற்றுக் கொடுத்து மாணவர்களை உருவாக்க ஜெபிப்போம்.

2. பள்ளிகளில் பணிபுரியும் சுமார் 97 லட்சம் ஆசிரியர்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தை கொடுக்கவும் ஜெபிப்போம்.

3. கல்வி பயின்று வரும் சுமார் 26.5 கோடிக்கும் மேற்பட்ட மாணவ மாணவியருக்கும் நல்ல ஞானம் உண்டாகவும் தேவ கிருபை, தயவு கிடைக்கவும் ஜெபிப்போம்.

4. உயர்நிலை கல்வி பயின்று மேல்நிலை கல்விக்கு செல்லாமல் இடைநிற்கும் மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு வேண்டிய பொருளாதார வசதிகள் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

5. மாணவிகள் அதிகமாக படிப்பை இடைநிறுத்துவது தடுக்கப்படவும், குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பை தொடர முடியாமல் காணப்படும் மாணவ மாணவியருக்கு அரசு சலுகைகள் வழங்கப்பட ஜெபிப்போம்.

## போதைப் பழக்கம்

- தமிழ்நாட்டில் சுமார் 90 லட்சம் பேருக்கு மது அருந்தும் பழக்கம் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- நாடு முழுவதும் சுமார் 15 கோடிக்கும் மேலான பேர் மது அருந்தும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள்.
- உத்திரபிரதேசத்தில் சுமார் 3 கோடிக்கும் மேலானோர் மதுபான பழக்கத்தில் இருக்கிறார்கள்.
- நாடு முழுவதும் சுமார் 2 கோடிக்கும் மேலானோர் கஞ்சா பழக்கத்தில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சுமார் ஒரு லட்சத்து நான்காயிரம் பேருக்கும், கேரளாவில் 3 லட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் பேருக்கும், ஆந்திராவில் 4 லட்சத்து 43,000 பேருக்கும் இப்பழக்கம் இருக்கிறது.
- நாடு முழுவதும் போதை மாத்திரைகள் சுமார் 1 கோடியே 86 லட்சத்து 44,000 பேரும், தமிழ்நாட்டில் 1 லட்சத்து 54,000 பேரும் பயன்படுத்துகின்றனர்.
- இது 18 வயது முதல் 75 வயது வரை உட்பட்டவர்கள் பயன்படுத்துவதாக மத்திய சமூக நீதித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## ஜெபக்குறிப்புகள்

1. மதுப் பழக்கத்திற்கு அடிமைபட்டிருக்கும் ஒவ்வொருவரும் இப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

2. கஞ்சா பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் சுமார் 2 கோடி பேரும் விடுதலை பெறவும், இனி யாரும் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகாதபடி பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

3. போதை மாத்திரைக்கு அடிமைப்பட்டிருக்கும் கோடிக்கணக்கானவர்கள் இப்பழக்கத்திலிருந்து முற்றிலும் வெளிவரவும், இப்பழக்கம் இனிவரும் இளம் தலைமுறைக்கு சென்றடையாதபடி தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

4. மது, கஞ்சா, போதை மாத்திரைகளுக்கு அடிமைபட்டிருக்கும் இளம் மற்றும் வாலிபர்களை கர்த்தர் தொட்டு, அவர்கள் மனந்திரும்பி இயேசுவின் சேனையாக எழும்ப ஜெபிப்போம்.

5. போதைப் பொருட்களை தடை செய்யவும், அது பயன்படுத்துவோருக்கு கடுமையான தண்டனைகள் அரசு வழங்கவும் ஜெபிப்போம்.

## பாலியல் தொழில்

- கொரோனா தொற்றின் காரணமாக கடந்த 2 வருடங்களாக பள்ளி கல்லூரிகளில் ஆன்லைன் வகுப்புகள் மட்டுமே நடைபெற்று வருகின்றது.
- மொபைல் போனில் இன்டர்நெட் சேவையை ஆன் செய்த பிறகு, இதர சேவைகள் அடிக்கடி வந்து போகும். அந்த பாப்அப்களை தெரியாமல் தொட்டுவிட்டால் குறிப்பிட்ட வெப்சைட்டுக்குள் சென்று அந்த வெப்சைட் திறக்கும்.
- பள்ளிப் பருவத்திலுள்ள பலரும் பாப்அப் ஆகும் தவறான இணையதளத்தில் சென்று தங்களை அறியாமல் பார்த்து விடுகின்றனர். ஒருமுறை பார்த்தால் அடிக்கடி சென்று பார்க்கத் தோன்றும். இதனால் இளைய தலைமுறையினர் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
- இந்த தவறான ஆடியோ சாட்டிங் மூலம் பல கல்லூரிப் பெண்கள் தனியாக தொலைபேசி எண்ணை வாங்கி அதன்மூலம் ஆடியோ சாட்டிங்கில் ஈடுபடுகின்றனர். இதன்மூலம் மாதம் தோறும் கணிசமான தொகை கிடைக்கின்றது.
- ஆபாசமான ஆடியோ மற்றும் வீடியோ கலந்துரையாடலில் இளம் தலைமுறை மட்டுமல்லாது, பல பெண்களும் ஏமாந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.



## ஜெபக்குறிப்புகள்

1. ஆடியோ, வீடியோ மூலம் ஆபாச உரையாடல்கள் மூலம் தவறான உறவுக்கு அழைக்கும் செயல்களை தடை செய்ய ஜெபிப்போம்.

2. இளம் தலைமுறையினர் தெரியாமல் தவறான இணையதளத்தில் சென்று தங்கள் வாழ்க்கையை இழந்து நிற்கும் ஒவ்வொருவரும் இதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

3. ஆடியோ மூலம் பெண்களிடம் ஆபாசமாக பேசி அவர்களை மிரட்டி பணம் பறிப்பதும், பாலியல் வன்கொடுமைகள் நடைபெறுவது தடுக்கப்படவும், பெண்களுக்கு பாதுகாப்பு உண்டாகவும் ஜெபிப்போம்.

4. பல ஆபாச இணையதளங்கள் தடை செய்யப்பட்ட பின்பும் தற்போது பல வெப்சைட்டுகள் மற்றும் செயலிகள் வேறுவிதமாக இயங்கி வருவது முற்றிலும் முடக்கப்பட ஜெபிப்போம்.

5. பல தொழில் நுட்பங்களை பயன்படுத்தி இணையதளம் மூலமாக இளைஞர்களையும் மற்ற வயதுடையவர்களையும் ஏமாற்றி வரும் நபர்கள் மேல் அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## சமூக வலைத்தளங்கள்

- இந்தியாவில் வாட்ஸ் அப் 53 கோடி பேரும், Youtube 44.8 கோடி பேரும், பேஸ்புக் 41 கோடி பேரும், இன்ஸ்டாகிராம் 21 கோடி பேரும், டிவிட்டர் 1.75 கோடி பேரும் பயன்படுத்துகிறார்கள்.
- இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வந்தது. இந்த குற்றங்கள் நடைபெறுவதில் முக்கிய பங்கு வகிப்பது சமூக வலைத்தளங்கள் என குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.
- சமூக வலைத்தளங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். தவறான தகவலைப் பரப்பக்கூடிய முதல் நபர் யார் என்ற தகவலை சமூக வலைத்தளங்கள் கண்டறிய வேண்டும்.
- சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் மன உறுதியை குலைக்கின்றதாகவும், பதட்டம் உடையவர்களாகவும் மாற்றுவதாக டிச் தி லேபிள் அமைப்பு நடத்திய ஆய்வில் கூறுகிறது.
- 12 வயது முதல் 20 வயதுக்குட்பட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதின் வயதினர் இணையம் வழியாக மற்றவர்களை துன்புறுத்தும் பழக்கம் பரவியுள்ளதாக ஆய்வு கூறுகிறது.



## ஜெபக்குறிப்புகள்

1. சமூக வலைத்தளங்களில் அடிமைபட்டிருக்கும் இளம் தலைமுறையினர் மற்றும் பதின் பருவத்தினரின் கண்கள் திறக்கப்படவும், அடிமைதனத்தின் ஆவிகள் வெளியேறவும் ஜெபிப்போம்.

2. சமூக வலைத்தளங்கள் மூலமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாலியல் போன்ற துன்புறுத்தல்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

3. சமூக வலைத்தளங்களுக்குள் செல்வோருக்கு சில கட்டுப்பாடுகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து செயல்முறைபடுத்த ஜெபிப்போம்.

4. சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் அநேகர் மனஉறுதியை இழந்து, தூக்கமின்றி மனஅழுத்திற்குள் இருக்கும் ஒவ்வொருவரும் இதிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

5. சமூக வலைத்தளங்கள் மூலமாக அநேகர் துன்புறுத்தப்படுவதும், காயப்படுத்தப்படுவதும் தடை செய்யப்பட ஜெபிப்பாம்.

# Revival IGNITERS

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின்
ஆழமான இரகசியங்களை
அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து
பெலப்படும் ஓர் இடமாகவும் **IGNITERS**
கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில்
பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை
பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

## EVERY 1ST SUNDAY
(5th September)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road. 9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsamane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road)
9442885315

## EVERY 2ND SATURDAY
(11th September)

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY
(12th September)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsamane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Office Dhanalakshmi Garden Behind Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 6 PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

## EVERY 3RD SUNDAY
(19th September)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
22A, Ist Floor, Thennur High Rd.,
Near KMC Bus Stop, Thennur,
9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via),
Keelamathapuram,
(TirunelveliDist).
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre, Bethel,
Plot 305/E, Mith Chowky Marve
Road Malad
9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI : (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, (Opp: Govt
Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,1A/25B,
Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound, Near
Vijaya Mall, Bye pass Road Corner.
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
MBT Road, Navalpur
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY
(25th September)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
M K Complex 71, Venkatesapuram
Near Bank Of Baroda, Trichy Main
Road. 9788788512

## EVERY 4TH SUNDAY
(26th September)

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower, V. Kotta
Road, Pernambut, Vellore Dist.
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:216,
Ist Floor Near Fire Service, Gandhiji
Road, Erode. 9750722000

**THIRUVALUR (2.30PM-5.30 PM)**
Gethsamane Prayer Center,
HSR Tower (Near Gowdi Church)
Theradi, Thiruvallur.
9442885315

இயேசு விடுவிக்கிறார்

**வாலிபர் உலகம்**

Sathiyam TV | YouTube | Comforter DIGITAL CHANNEL



**சத்தியம் TV** சனிக்கிழமை 6:30am

அதே நேரத்தில் Youtube மற்றும் COMFORTER TVயிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

**9750955547**

ரவி

# கிறிஸ்தவத்தின் சிறப்புகள்



## மன்னிப்பு மற்றும் மீட்பின் உண்மை!

*என் அன்புக்குரிய வாலிப தம்பி மற்றும் தங்கைகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! கடந்த சில மாதங்களாக வாலிபர்கள் எதிர்கொள்ளும் சில முக்கியமான கேள்விகளின் பதில்களை ஆராய்ந்தோம். இம்மாதத்திலும் வருகிற ஒருசில மாதங்களிலும் கிறிஸ்தவத்தில் காணப்படும் தனித்துவமிக்க சிறப்புகளை நாம் ஆராயலாம். தனித்துவமிக்க என்று நான் குறிப்பிடுவதற்கு காரணம், அச்சிறப்புக்களை வேறு மதங்களில் நான் கண்டதில்லை. ஆம் நண்பர்களே, அத்தகைய உன்னதமான சிறப்புகளை நாம் கிறிஸ்தவத்திலும், இயேசு கிறிஸ்துவிலும் காண முடியும். முதல் சிறப்பாக, மீட்பு மற்றும் பாவ மன்னிப்பின் (The reality of forgiveness Redemption) எதார்த்தத்தைக் குறித்து ஆராயலாம்.*

உலகில் பரவலாக காணப்படும் அனைத்து மதங்களும், மனிதனுக்கு அவனுடைய கிரியைகளின் நிமித்தமே இரட்சிப்பு உண்டாகும் என்று கூறுகிறது. அதாவது ஒருவன் செய்யும் பாவங்களைவிட நன்மைகள் அதிகமாக அவனிடம் காணப்பட வேண்டும். அதேசமயம் நீங்கள், நான், நாம் அனைவரும் பாவம் செய்திருக்கிறோம். இதை உறுதிப்படுத்தும் விதமாக, **''எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானோம்'' (ரோமர் 3:23)** என்று வேதம் சொல்கிறது. அதேபோல, **''நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்...'' (1 யோவான் 1:8** என்று வேதம் சொல்கிறது. இவ்வசனங்களிலிருந்து ஒரு காரியம் நமக்கு உறுதிபட விளங்குகிறது. ''ஒருவரும் பரிபூரணமானவர்கள் இல்லை (Nobody is Perfect)''.




அதேநேரம், தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் என்றும் பரிபூரணரென்றும் வேதம் கூறுகிறது. தாவீது ராஜா தன்னுடைய ஒரு சங்கீதத்தில், **''இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' (சங்கீதம் 51:5)** என்று சொல்கிறார்.

இப்பாவம் செய்யும் துர்குணம் நமக்கு எங்கிருந்து வந்தது? ஆம் நண்பர்களே, நீங்கள் சிந்தித்தது சரியே! ஆதாம், ஏவாள் ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் தேவன் புசிக்க வேண்டாம் என்று கட்டளையிட்ட அக்கனியைப் புசித்தபடியினால் மனுகுலத்தின் மேல் பாவம் வந்தது. அவர்கள் வழிதான் பூமியில் மனிதர்கள் தலைமுறைகளாக வரத்தொடங்குகிறார்கள் இவ்வாறாக, பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதருக்கும் பாவம்

செய்யும் ஆற்றல் / தன்மை உடன் வருகிறது. ஆகவே பாவத்தில் பிறக்கும், பாவத்தில் வாழும் நாம் எப்படி நம்முடைய கிரியைகளின் மூலமாக பரிசுத்தமான தேவனைப் பிரியப்படுத்தவோ அல்லது அவர்முன் நிற்கவோ முடியும்? இங்குதான் நம்மீது கொண்டுள்ள அந்த அன்பின் நிமித்தம் தேவனே அதற்கான வழியை ஏற்படுத்துகிறார். **"... வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்தவருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்த மாட்டாது" (எபிரெயர் 10:1)** என்று வாசிக்கிறோம். இதன் அர்த்தம் தொடர்ந்து செலுத்தப்படும் மிருகங்களின் பலி மனிதனுடைய பாவத்தை முற்றிலுமாக போக்காது என்பதாகும். அதேநேரம், மனிதன் செய்த, செய்கிற பாவங்களுக்கான நிவிர்த்தி அல்லது பரிகாரம் இல்லாமல், தேவனால் மனிதனையும் மன்னித்து மீட்க முடியாது. காரணம், அவர் நீதியுள்ள தேவன்.

ஆகவே, பிதாவாகிய தேவன்தாமே மனிதனுடைய பாவத்திற்கான பரிகாரத்தையும், மனிதனுடைய மீட்பின் வழியையும் தன்னுடைய ஒரேபேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக உருவாக்குகிறார். ஆம் நண்பர்களே, மற்ற மதங்கள் கூறுவதுபோல, பாவத்தால் ஆளப்படும் நம்முடைய கிரியைகள் எப்படி ஒரு பரிசுத்தமான தேவனை பிரியப்படுத்தும்? ஆகவேதான் பாவத்தின் நிழல்கூட இல்லாத இயேசு நம்முடைய மீட்பிற்காய் பலியானார்.

ஒரு எளிமையான உதாரணம் சொல்லவேண்டுமானால், பால் கெட்டுப்போயிற்றென்று அதனால் போடப்படும் தேனீரும் கெட்டுப்போய்தான் இருக்கும் (If the milk is spoiled, the tea produced using that milk will be spoiled too). ஆகவே, நம்முடைய கிரியைகள் நம்மை மீட்காது. மாறாக, இயேசுவின் மேல் வைக்கும் விசு வாசமே நம்மை மீட்கும் என்பது மிகத் தெளிவாகிறது.

இன்னும் எளிமையாக சொல்ல வேண்டுமானால், தேவனுக்குப் பிரியமான ஒரு வாழ்க்கை வாழ நாம் புதிய சிருஷ்டியாக மாற வேண்டிய அவசியம் உள்ளது. காரணம், பழைய மனிதன் பாவத்தால் ஆளப்படுகிறபடியால், அவனுடைய கிரியைகள் தேவனைப் பிரியப்படுத்தாது. நாம் இயேசுவில் விசுவாசிக்கும்போது, 2 கொரிந்தியர் 5:17ம் வசனத்தில் சொல்வதுபோல, புதுசிருஷ்டியாக மாறுகிறோம். இதிலிருந்து விசுவாசத்தின்மூலம் வருகிறதான பாவமன்னிப்பும், மீட்பும் மற்ற மதங்களில் காணப்படாத, தனித்து வமிக்க கிறிஸ்தவத்தின் சிறப்பு என்று தெளிவாகிறது ●






# இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

சதீஷ்



## கள்ளத் தீர்க்கதரிசிகள்!

இயேசுவின் வருகைக்கு முன்பாக இந்தப் பூமியில் என்னவெல்லாம் சம்பவிக்கும் என்பதையும், நாம் எப்படி அவருடைய வருகைக்கு ஆயத்தமாக வேண்டும் என்பதையும் ஒவ்வொரு மாதமும் பார்த்து வருகிறோம். இந்த மாதத்தில் நாம் பார்க்கப் போகிற முக்கியமானதொரு அடையாளம் கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ள ஊழியர்கள், கள்ளப்போதகர்கள் மற்றும் கள்ள அப்போஸ்தலர்கள். இவர்கள் எல்லாரும் நம்மை சுற்றி வாழ்ந்துக் கொண்டுத்தான் இருக்கிறார்கள். **''கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்...'' (2 பேதுரு 2:1).** இவர்களை எப்படி நாம் இனங்கண்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை தான் நாம் பார்க்கப் போகிறோம்.

உலகமெங்கும் இதுவரைக்கும் அநேக கள்ள ஊழியர்கள் எழும்பி ஜனங்களை வஞ்சித்துக் கொண்டுத்தான் இருக்கிறார்கள். ஏறக்குறைய 37க்கும் மேற்பட்ட கள்ளக் கிறிஸ்துக்கள் தோன்றி இருக்கிறார்கள். அதில் 20ம் நூற்றாண்டில் அதிகமான கள்ளக்கிறிஸ்துக்களும் ஊழியர்களும், தீர்க்கதரிசிகளும், போதகர்களும் தோன்றி இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் பெரும்பாலும் அமெரிக்கா, மெக்சிகோ, மலேசியா, இலங்கை, ரஷ்யா, ஆப்பிரிக்கா நாடுகளில் இருந்து எழும்பி அநேக ஜனங்களை வஞ்சித்து வருகிறார்கள். தற்போது இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் எழும்பி இருக்கிறார்கள் என்பது பலரும் அறிந்த உண்மை. நான் ஜெபித்தால் உங்கள் பாக்கெட்டில் பணம் வரும் என்றும், உங்கள் வங்கிக் கணக்கில் பணம் விழும் என்று பேசி ஜனங்களை வஞ்சிக்கும் கள்ள ஊழியர்கள் நம் தமிழ்நாட்டிலும் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் இனங்கண்டுக் கொள்ள வேண்டும்.

ஓநாய் ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு வருவதுபோல இவர்கள் எல்லோரும் உண்மையான ஊழியர்கள் போலவும், ஜனங்களுக்காக பாரமுள்ளவர்கள் போலவும், பரிதபிப்பவர்கள் போலவும் தங்களை இவர்கள் காட்டிக் கொள்வதால் அநேக ஜனங்கள் அவர்களின் மாய்மாலத்தால் ஏமாற்றப்பட்டு, தங்கள் வருமானத்தை அவர்களுக்குத் தாரை வார்ப்பதை பார்க்க முடிகிறது. தங்கள் மந்தையில் இருக்கும் ஆடுகளை அடித்து சாப்பிடும் கொடிய உள்ளங்கள் கொண்ட கள்ள ஊழியர்கள் உங்களைச் சுற்றி இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.



| உண்மை ஊழியர்கள் | கள்ள ஊழியர்கள் |
|---|---|
| ■ இயேசுவை புகழுவார்கள் | ■ தன்னைத்தானே புகழுவார்கள் |
| ■ தாழ்மை இருக்கும் | ■ மேட்டிமையான பேச்சு இருக்கும் |
| ■ பொறுமை இருக்கும் | ■ பெருமையாக பேசுவார்கள் |
| ■ உலகத்தில் நல்ல சாட்சியாய் இருப்பார்கள் | ■ ஒழுங்கின்மையாக இருப்பார்கள் |
| ■ ஜனங்களை இயேசுவின் பக்கம் திரும்புவார்கள். | ■ ஜனங்களை தன் பக்கமாக திரும்புவார்கள் |

உண்மையான ஊழியர்கள் மற்றும் கள்ள ஊழியர்களை நாம் எப்படி இனங்கண்டு கொள்வது? **''அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்;...'' (மத். 7:16).**

**''...கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்க தரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்த கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்'' (மத். 24:24,25)** என்று இயேசு நம்மை எச்சரித்து இருக்கிறார். நாம்தான் இவர்களை அடையாளம் கண்டுக் கொண்டு விழிப்புடன் இருக்க வேண்டும்.

*எனக்கன்பான வாலிபர்களே, இயேசுவின் வருகைக் கும் உலகத்தின் முடிவுக்கும் முன்பாக இப்படிப்பட்ட கள்ள ஊழியர்கள் உலகத்தில் தோன்றுவார்கள் என்பது வேதத்தில் சொல்லப்பட்ட சத்தியம். எனவே இப்படிப்பட்ட ஊழியர்களை விட்டு நாம்தான் விலகி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ''...நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள்; அவர்களைப் பின்பற்றாதிருங்கள்'' [லூக்கா 21:8]* ●

**இயேசுவின் வருகையைக் குறித்த இன்னொரு அடையாளத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.**

## உலக முதலுதவி தினம்



விபத்து மற்றும் ஆபத்துக் காலங்களில் மனித உயிர்களை உடனே காப்பாற்றுவதே முதலுதவி ஆகும். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் இரண்டாவது சனிக்கிழமை உலக முதலுதவி தினமாகக் கொண்டாடப்படுகிறது. சரியான நேரத்தில் முதலுதவி செய்யப்பட்டால் பல மனித உயிர்களை காப்பாற்ற முடியும்.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சரியான நேரத்தில் முதலுதவி செய்தால் உயிர் பிழைக்க வாய்ப்புள்ளது. எனவே ஒருவர் பாதிப்புக் குள்ளானால் தயங்காமல் முதலுதவி செய்ய முன்வர வேண்டும். முதலில் பாதிப்படைந்தவர் உணர்வுடன் இருக்கிறாரா (ரத்த ஓட்டம், சுவாசப் பாதையில் அடைப்பு, சுவாசம் உள்ளதா) என்பதை சோதிக்க வேண்டும். எவ்வகை பாதிப்பானாலும் இந்த மூன்றும் அவசியம். ஒருவர் மயக்கமடைந்துவிட்டால், அவரை சூழ்ந்து நிற்கக் கூடாது. காற்றோட்டம் வருகிற மாதிரி சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

# ஆசிரியர் தினம்

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 5ம் தேதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. ஒழுக்கம், தன்னம்பிக்கை, பொது அறிவு என பல்வேறு விஷயங்களைக் கற்பித்து உண்மையான வழிகாட்டியாக ஆசிரியர்கள் திகழ்கின்றனர். அப்படிப்பட்டவர்களை நாம் கொண்டாட வேண்டியது அவசியம் தானே...



## ஆசிரியர் தினம் ஏன் கொண்டாடப்படுகிறது?

- கற்பித்தல் என்பது உலகில் மிகவும் புனிதமான பணி. மாணவர்களின் மனதை அறிந்து அவர்களை உருவாக்குவதே ஆசிரியர்களின் பணி ஆகும்.
- மாணவர்களின் மனதை அறிந்து அவர்களை பொறுப்புள்ள குடிமக்களாக மாற்றுபவர்கள் ஆசிரியர்கள்.
- மனித வரலாற்றில் பிரிக்க முடியாத மனித சமுதாயத்தின் அச்சாணியாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள்.
- வாழ்க்கை என்ற பாடத்தை கற்பித்து மாணவர்களுக்கு ஒரு உண்மையான வழிகாட்டியாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள்.
- மாணவர்களுக்கு அறிவூட்டுவதோடு அவர்களின் வாழ்க்கையை வடிவமைக்கின்றனர்.
- ஆசிரியர்கள் நம் ஒவ்வொருவரின் வெற்றியின் உண்மையான தூண்கள்.
- அறிவைப் பெறவும், திறன்களை மேம்படுத்தவும், நம்பிக்கையை வளர்க்கவும், வெற்றிக்கான சரியான பாதையைத் தேர்வு செய்யவும் உதவுகின்றனர்.
- ஒரு குழந்தையை 10 அல்லது 20 வருடங்களில் ஒரு பொறியாளராகவோ, மருத்துவராகவோ, விஞ்ஞானியாகவோ, கணினி நிபுணராகவோ, பெரும் தொழிலதிபராகவோ உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள்.
- ஒரு வெற்றுத் தாளாய் பள்ளியில் காலடி எடுத்து வைக்கும் நம்மை, ஒரு புத்தகமாய் வெளிக் கொண்டு வருபவர்கள் தான் ஆசிரியர்கள்.
- சாதாரண மாணவர்களை, தங்களின் அறிவுத்திறத்தாலும், அனுபவ ஆற்றலாலும், நல்ல திறமைசாலிகளாகவும் சிறந்த பண்பாளர்களாகவும் மாற்றுபவர்கள் ஆசிரியர்கள்.

உலகப்பிரகாரமாய் நம்மை போதித்து நடத்துவதற்கு ஒருசில ஆண்டுகள் ஆசிரியர்கள் நம்முடன் இருப்பார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து நம்முடைய கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் போதித்து நடத்துவார். "நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்று சங்கீதம் 32:8-ல் கூறுகிறது.

**எனவே எப்பொழுதும் இயேசுவை உங்களுடைய நல்ல ஆசிரியராக வைத்துக் கொள்ளுங்கள்! எப்பொழுதும் எதிலும் வெற்றி பெறலாம்!**

ஆதாரம்: இணையதளம்

# வேதாகம
## புதையல் வேட்டை

கீழே "ஒருவேளை வேதத்திலுள்ள பாத்திரங்கள், இப்பொழுது உள்ளது போல் ஒருவருக்கொருவர் நன்றி செலுத்தியிருந்தால், இப்படித்தான் சொல்லி இருப்பார்களோ?" என்று கற்பனை வடிவில் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையை பொருத்தி, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1. எனக்கு ஓர் அறை இருக்கிறது என்று நினைத்துச் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால், அது என் வீடுபோல் என்று உணரச் செய்கிறது என்று...

2. நான் கஷ்டப்பட்டு கொண்டிருந்தபோது நீ உன் ஆலோசனையினால் ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கினால், இது என் மேலுள்ள உன் அன்பு என்று...

3. நான் அந்தத் தண்ணீரின் மேல் ஆவல் கொண்டேன் என்று நீங்கள் அறிந்த மாத்திரத்தில், உங்கள் ஜீவனையும் பணயம் வைத்து அதைக் கொண்டு வந்தீர்கள். யார் அதைக் குடிப்பார்கள் என்று...

4. நான் என் சகோதரனுக்குப் பதிலாக தேவனால் உமக்குக் கொடுக்கப் பட்டேன் என்று நீ சொன்னாய். அது நீ என் மேல் அன்பு செலுத்துவதற்கு அடிகோலியது. நன்றி என்று...

5. என் வாழ்க்கைத் துணையை நான் தெரிந்து கொள்வதற்கு காரணமாய் இருந்தாய். அது தேவ தேர்ந்தெடுப்புதான் என சொன்னாய். உனக்கு என் நன்றி என்று...

6. என்னை வளர்ப்பதற்கு என் தாயையே கொண்டு வந்து, நான் உன் பக்கத்திலேயே இருக்கும்படி செய்தாய். அதற்கு உனக்கு நன்றி என்று...

7. இப்பொழுது நான் ஒரு ராஜாத்தி, இது உண்மைதான், ஆனால் நீ இல்லாமல் நான் இராஜாத்தியாகியிருக்க முடியாது. நன்றி...

8. எனக்கு ஒரு நண்பன் தேவைப்பட்டான், என்னை நீ உன் பக்கமாய் சேர்த்துக் கொண்டதால் நீதான் அந்த நண்பன் என்று நிரூபித்து விட்டாய் என்று....

9. யோசுவா வெற்றி பெறும்படியாய் நீங்கள் என் கைகளைத் தாங்கிக் கொண்டு சூரியன் மறையும் வரைக்கும் நின்றீர்கள். அது நீங்கள் இஸ்ரவேலின் மேலுள்ள அன்பு என்று...

10. என் தலையில் உள்ள கிரீடத்தினிமித்தமும், என் ஜீவனிமித்தமும், உனக்கு நான் என்றுமாய் கடமைப்பட்டுள்ளேன். நீ இல்லாவிட்டால் நான் இல்லை. நான் சிறுவனாயிருந்தபோது என்னை நீ காத்தாய் என்று...

a) மோசே, ஆரோனிடமும் ஊரிடமும் சொன்னான்.

b) எஸ்தர், மொர்தெகாயிடம் சொன்னாள்.

c) மோசே தன் மாமனாரிடம் கூறினான்.

d) யோவாஸ், தன் அத்தையாகிய யோசேபாளைப் பார்த்துக் கூறினான்.

e) பவுல், பர்னபாவிடம் கூறினான்.

f) ஈசாக்கு, ஆபிரகாமின் ஊழியக்காரனிடம் கூறினான்.

g) எலிசா, சூனேம் ஊராளாகிய அந்தப் பெண்ணிடம் கூறினான்.

h) சேத், ஏவாளிடம் கூறினான்.

i) தாவீது அந்த மூன்று பராக்கிரமசாலிகளைப் பார்த்துக் கூறினான்.

j) மோசே, மிரியாமிடம் கூறினான்.

### கடந்த மாத விடைகள்

1. கிபியோனின் குடிகள் (யோசுவா 9:1-16)
2. எலிப்பாசு, பில்தாது, சோப்பார் (யோபு 2:11,13)
3. தாவீது, யோனத்தான் (1 சாமு. 18:1-3)
4. யோவான் ஸ்நானன் (யோவான் 3:29)
5. லாசரு, மரியாள், மார்த்தாள் (யோவான் 11:5)
6. ஏரோது, பிலாத்து (லூக்கா 23:6-12)
7. ஆக்கில்லா, பிரிஸ்கில்லா (ரோமர் 16:3,4)
8. ஈராம் (1 இராஜா. 5:1; 2 சாமு. 5:11)
9. ஆபிரகாம் (யாக்கோபு 2:23)
10. தானியேல் (தானி. 2:48,49)

கடந்த மாத வெற்றியாளர்

**ஷாலினி,**
மதுரை

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்
15.09.2021

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**Jesus Redeems Youth Ministries,**
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353333 | youth@jesusredeems.org

# செய்திகள்!

## உலகம் முழுவதும் பாதாளத்தை நோக்கி பவள பாறைகள்!

### கடலின் வெப்பநிலை அதிகரிப்பு!

புவி வெப்பமயமாதலால் பல்வேறு இயற்கை பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறது. தற்கால உலகின் கார்பன் உள்பட பசுமை இல்ல வாயுக்கள் வெளியீட்டின் அளவு அதிகரிப்பால் இயற்கை சூழல் பாதிப்படைந்து வருகிறது. கடலின் வெப்பநிலையிலும் மாற்றம் ஏற்பட்டு வெப்பநிலை அதிகரித்து கடல் நீரில் ஆக்சிஜன் அளவு குறைந்து, கடல் வாழ் உயிரினங்களைப் பாதித்து வருகிறது. குறிப்பாக பவளப்பாறைகள் கடும் பாதிப்பைச் சந்தித்து வருகிறது. மேலும் கடல் மாசடைதல், வெப்பமயமாதல் உள்ளிட்டவற்றால் உலகம் முழுவதும் கடல் பவளப்பாறைகள் ஆபத்தில் இருப்பதாக அமெரிக்காவில் சுற்றுசூழல் பாதுகாப்பு அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பில் எச்சரித்துள்ளது.



உலகின் கவின் மிகுபவளப் பாறைகள் நிறைந்த கடல் பகுதிகளாக ஆஸ்திரேலியா, மாலத்தீவு, பிஜி, இந்தோனேசியா, மெக்சிகோ, இந்தியா உள்ளிட்ட கடல் பகுதிகள் திகழ்கிறது. உலகின் மிக நீளமான பவளப்பாறை ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாண கடல் பகுதியில் உள்ளது. இது 'கிரேட் பேரியர் பவளப்பாறை' என அழைக்கப்படுகிறது. 2,300 கி.மீ. தூரம் வரை பரவியுள்ளது. அதேபோன்று 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் வாழும் பவளப்பாறைகள் நிறைந்த பகுதியாக இந்தியாவில் தமிழகத்தில் மன்னார் வளைகுடா கடல் பகுதி திகழ்கிறது. இங்கு பவளப்பாறைகள் அழிந்து வருவதால், கடலின் வெப்பநிலை அதிகரித்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருந்தனர். கடல் வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கு பவளப் பாறைகளும் முக்கியமானதாக திகழ்கிறது. கடலின் அளவில் 0.1 சதவீதம் பவளப்பாறைகள் உள்ளன. இவை பெரும்பாலான கடல் உயிரினங்களின் வாழ்வாதாரமாக திகழ்கிறது. மேலும் மிக முக்கியமாக கடல் அரிப்பு மற்றும் சுனாமி போன்றவற்றிலிருந்து தீவுகளை பாதுகாப்பதில் அரணாக திகழ்கிறது. பவளப்பாறைகள் கடலில் $20^0$செ. முதல் $24^0$செ. வெப்பநிலையில் செழித்து வளர்கிறது. இந்த வெப்பநிலை அதிகரிக்கும்போது அவை அழியும் சூழலுக்கு ஆளாகிறது. உலகில் 1970களில் இருந்ததைவிட 50 சதவீதம் பவளப்பாறைகள் குறைந்து விட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கிறது.

கார்பன் வெளியீட்டால் கடலில் வெப்பம் அதிகரித்தல், கடல் மாசடைதல், உள்ளிட்டவற்றை குறைத்தால் பவளப்பாறைகளை பாதுகாக்கலாம். இல்லையெனில் 2100ல் கடலில் பவளப்பாறைகள் இல்லாமல் போய் விடும் என ஏற்கனவே ஹவாய் பல்கலைகழக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். சர்வதேச அளவில் பவளப்பாறைகளை பாதுகாக்க ஐநா சார்பில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

- ஆகஸ்ட் 04, தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# சுவிசேஷ சேனை













கடந்த ஜுலை மாதம் 5 நாட்கள் நமது **Igniters** மூலமாக பல கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். இதன் மூலம் ஆயிரகணக்கானோருக்கு சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு கைப்பிரதிகள் கொடுக்கப்பட்டதுமன்றி, 500க்கும் மேற்பட்ட சிறுபிள்ளைகளுக்கு கொரோனா விழிப்புணர்வு மற்றும் ஆன்லைன் வகுப்பின் அவசியத்தையும் கற்றுக்கொடுக்க தேவன் கிருபை செய்தார். தேவன் வாலிபர்களைக் கொண்டு எழுப்புதல் அக்கினியைப் பரவச் செய்தார். தொடர்ந்து வாலிபர்கள் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவித்து வருகிறார்கள். எழுப்புதல் அக்கினி பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. தேவனுக்கே மகிமை!







Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-08-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

# உங்களின் கருத்து



இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக வாலிபர் உலகம் பத்திரிக்கை மாதந்தோறும் வெளியிட்டு வருகிறோம். அநேகர் சந்தா செலுத்தி சந்தாதாரர்களாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு மாதமும் பலவிதமான தலைப்புகளில் கட்டுரைகள், சாட்சிகள் மற்றும் பல ஆலோசனைகளைப் படித்து வருகிறீர்கள். நீங்கள் படித்ததில் எந்தப் பகுதி உங்களோடு பேசியது அல்லது எந்தப் பகுதி பிடித்திருக்கிறதோ அந்தப் பகுதியை டிக் ☑ செய்து, அதன் மூலம் நீங்கள் கற்றுக்கொண்டது அல்லது தேவன் உங்களோடு பேசியதைச் சுருக்கமாக இரண்டு வரிகளில் எழுதி இந்தப் பக்கத்தை போட்டோ எடுத்து கீழேக் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்கு Whats app-ல் தெரியப்படுத்தவும். அதுமாத்திரமல்லால் உங்களது கருத்துக்களையும் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.



- ☐ தலைவாசல்
- ☐ Heart Beat
- ☐ முகப்பு செய்தி
- ☐ சாட்சி
- ☐ எச்சரிப்பின் செய்தி
- ☐ சாதனை
- ☐ சிந்தனை சிதறல்
- ☐ வேத ஆராய்ச்சி
- ☐ அலசல்
- ☐ செய்தி
- ☐ ஜெபக்கையேடு
- ☐ சிறப்புக் கட்டுரை
- ☐ வேதாகம புதையல் வேட்டை
- ☐ உண்மை சம்பவம்





.....................................................................................................................

.....................................................................................................................

+91 - 9750955547